அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

-Page-No-157

மலர் 4 இதழ் 4 விலை அ.4	நந்தன ௵ ஆடி மீ ஜுலை—ஆகஸ்டு—1952	வருட சந்தா ரூ. 2-4-0

ACC. NO. 18581.

சிவபெருமானைக் குறித்து தவம் செய்யும் உமாதேவி
யாருக்கு மட்டும் சிவபெருமான் தன்
திருமேனியைக் காட்டுதல்
(கந்தபுராணச் சித்திர விளக்கம்—38)

158

பொருளடக்கம்

			பக்கம்
1.	திருப்புகழ் அநுபவம் (திருப்புகழ்மணி)	...	145
2.	மெய்யழகு (தென்னாப்பிரிகா ச. மு. பிள்ளை)	...	149
3.	அதிசயம் அநேகமுற்ற பழனி (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை)	...	153
4.	பக்தியும் இசையும் (கீழ்வேளூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை)	...	157
5.	மதுரை காவலர் (ரசபதி)	...	165
6.	என்ன புண்ணியம் (தி. சு. மறைமலையார்)	...	176
7.	திருமுறை இன்னிசை உணர்ச்சிப் பெருவிழா	...	182
8.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம் (வி. எஸ். வேங்கடராமன்)	...	188
9.	Redemption—The Royal Road (Thiruppugal Mani)	...	191

கர வருட பன்னிரண்டு இதழ்களும் பயின்டு செய்யப்பட்டது ரூ. 3—6—0. தபால் செலவு அணா 6. வேண்டுவோர்கள் ரூ. 3—12—0 அனுப்பவும் வி. பி. இல்லை.

'அமிர்தவசனி'யின் முன்னேற்றத்தைக் கருதி ரூ. 50—0—0 நன்கொடையாக உதவும் அன்பார்ந்த நேயர்களுக்கு ஆயுள்வரை பத்திரிகை அனுப்பப்பெறும்.

அமிர்தவசனி சந்தா அறிக்கை

சித்திரை முதல் பங்குனி முடிய வருட சந்தா இலங்கை உள்பட உள்நாட்டிற்கு ரூ. 2—4—0 நான்கு வருட சந்தா ரூ. 8—4—0 அயல் நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 3—0—0 4 வருட சந்தா ரூ. 11—0—0.

முன்னதாகச் சந்தா அனுப்புகிறவர்களுக்குமட்டும் பத்திரிகை அனுப்பப்படும் (வி. பி. இல்லை)

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

ஸ்ரீ அருணகிரிநாதர் 'திருப்புகழ் மாலை'	(160 பாடல்)	0—8—0
பாராயணத் தோத்திரத் திரட்டு		0—1—6
கம்பர் தமிழ் அகராதி	(940 பக்கம்)	7—12—0
	செலவுடன்	8—9—0
ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய கந்தர் அனுபூதி (ரசபதி அவர்கள் விரிவுரையுடன்)		1—0—0
ஷை திருவகுப்புகள்	ஷை ஷை	1—0—0

கிடைக்குமிடம்: அமிர்தவசனி காரியாலயம், 54, பந்தர் தெரு, சென்னை-1

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ௵ ஆடி ௴ ஜுலை—ஆகஸ்டு 1952	இதழ் 4

திருப்புகழ் அநுபவம்

(திருப்புகழ் மணி)

பகுதி - 5

'ஐவாய் வழிசெல்லும் அவா வினையே'

ஆசையும் பேரானந்தமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளாகும். ஆசையின் நோக்கு வெளி நோக்கு. மண், பொன், பெண் என்ற மூன்றையும் பற்றியது ஆசையென்பர். மெய், வாய், விழி, நாசி, செவியெனும் ஐம்பொறிகள் உலகப் பொருள்களின் அநுபவத்தைத் தேடி, அந்த உலகப்பொருள்களை நாடுகின்றன. மனம் அவ் வழியே செல்கின்றது. உலகப் பொருள்களோ, இன்றை நாளை மறைந்துபோகும் தன்மையுடையன. உருவம், மாறி, மாறி அழிந்து விடுகின்றது. ரூப ரஸ கந்த

என்னரசே கேட்டிலையோ என் செயலோ ஏதுமில்லை
தன்னரசு நாடாகித் தத்துவங்கூத் தாடியதே

உணர்ச்சிக்கு இடமில்லாமல் அது அழிந்துவிடும். பற்றிய பொருளை இழந்து விடுவதால் மனம் துன்பம் உறுகின்றது.

உலகப் பொருள்களில் இந்திரியங்கள் செல்லாமல் இருக்க வேண்டுமானல், இந்திரியங்களை எப்படிக் கட்டுப் படுத்துவது? இது பெரிய காரியம். கட்டுப் படுத்துவதற்கு மிகவும் உபயோக முள்ள கருவி திருப்புகழ்.

'கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவா வினையே'

முருகன் பாதாரவிந்தத்தைப் பெற்று,அவனருளால் ஐம்பொறிகளை வென்றுவிடு என்று உபதேசிக்கின்றார். வகை எப்படி? அதைப் பார்ப்போம்.

பகுதி - 6

விழியின் வெற்றி

ஐம்பொறிகளின் வன்மை ஈசன் கொடுத்த வன்மை. ஆயினும் ஐம்பொறிகளுக்கு ஒரு கட்டுப்பாடு, தெய்வம் ஏற்படுத்தி இருக்கின்றது. ஒரு பொருளிலோ, ஒரு விஷயத்திலோ ஈடுபட்ட ஐம்பொறிகள், மற்றப் பொருள்களில் அதே நேரத்தில் ஈடுபட முடிவதில்லை. எப்படியோ வெனில், இரண்டு கண்கள் இருப்பினும் காக்ஷி யொன்று தான். ஒரு கண்ணுல் ஒன்றையும் மற்றொரு கண்ணுல் வேறு பொருளையும் பார்க்க முடிகின்றதில்லை.

மாசான நெஞ்சன் இவன் வஞ்சனென்றே வாய்திறந்து
பேசா மவுனம் பெருமான் படைத்ததுவே

காக்ஷியைக் காண்பவன் ஒருவன் ஆனதால், கண் கள் இரண்டாயினும் உணர்ச்சி ஒன்றே ஒன்று தான். உலக விநோதங்களைப் பார்க்க விரும்புகின்ற மனம், கண்வழிச் சென்று பார்க்கின்றது. ஒன்றைப் பார்க்குங்கால், அந்த ஒன்றுதான் கண்களில் விழு கின்றது. ஒன்றைக் குறியாய்ப் பார்த்து நிற்பவன், மற்றைப் பொருள்களை அதே நிமிஷத்தில் பார்க்க முடியாது. காக்ஷி பார்க்கும் கண், பார்க்கின்ற காக்ஷி யைத் தவிர, மற்றைய காக்ஷிகளுக் கெல்லாம் அடை பட்டது போல்தான். கண் எனும் இந்திரியத்தை அடக்க வேண்டுமானால், இரண்டு வகை யுண்டு. ஒன்று மனத்தைக் கண்ணுடன் சேர்க்காது இறுத்தி விடல். தியானத்தில் சமாதியில் மனதை எங்கும் எவ்வழியும் செல்லாமல் அடக்கிவிடல். இப்படி செய்துவிட்டால் ஐம்பொறிகளும் அடங்கிவிடும். தியானத்தாலும் சமாதியாலும் மனதை அடக்க முடி யாதவன், எப்படித்தான் ஐம்பொறிகளை அடக்க முடியும்? ஒரு காக்ஷியைப் பார்க்கின்ற கண்கள், அப்படிப் பார்க்கும் நேரத்திலே வேறொரு காக்ஷியும் பார்க்க முடியாதாகையால், கண் எனும் வாய்க்காலை, ஒரு காக்ஷியை, அதற்குக் கொடுத்து குறுக்காட்டி, அதை அடைத்து விடலாம். முருகன் எனும் அற்புத ரூபத்தைப் பார்த்து களிக்க, கண்முன் நிறுத்திவிட்டால், முருகன் உருவ மல்லாததைப் பார்க்க இயலாது. காக்ஷியைக் கொண்டு, கண்ணை உலக விஷயங்களில் போகாது அடைத்துவிட வழி

* கற்பதெல்லாங் கற்றேம் முக் கண்ணுடையாய் நின்பணியாய் நிற்பதுகற் றன்றே நிருவிகற்ப மாவதுவே

காட்டுகின்றார் அருணகிரியார். முருகன் ரூபத்தை இடைவிடாது பார்த்துக் கொண்டே இருந்தால், உலகம் நம் காக்ஷியினின்று மறைந்துவிடும். உலக கடமைகளைச் செய்து முடிக்க, வேண்டிய மட்டும் இவ்வுலகைப் பார்த்து, மற்றைய நேரங்களில் முருகனுருவத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தால், உலகத்தில் செல்கின்ற கண்கள் பாதார விந்தத்திலேயே நின்றுவிடும். வடிவும் அழகும் வளமையும் இளமையும் உடைய முருகன் உருவம், உலகுக்கு எல்லாம் இறைவனாக நிற்கும் தெய்வத்தின் ரூபமாதலால், முருகன்உருவத்தைக்கண்டு, உலகத்தைக் கண்ணினின்று அகற்றிய பக்தர்கள், உலகைப் பாராத பேறு பெற்றவர்கள் ஆவர். இவ் வகையில், சாதாரண மக்கள் கூட ப்ரம்ம சொரூபமான முருகனைக் கண்டு, அவன் உருவக் காக்ஷியாலேயே, கண்களை அடைத்து, கண்வழியாய்ச் செல்லும் ஆசைகளையும் வினைகளையும் அழித்துவிடலாம். உருவமும் அருவமும் ஆகி அவற்றுள் மறைந்து நிற்பான் முருகன். உலகெலாம் நிறைந்த முருகன், கருணையால் சிற்சில ரூபங்களில் எளிதில் காணப்படுவான். ரூபங்களிலே தெய்வத்தைப் பார்க்க வேண்டின், ஷண்முக ரூபமாகப் பார்க்கலாம். இந்த ரூபத்தில் பெரியோர்களுக்கும் தவ முனிவர்களுக்கும் தரிசனம் கொடுத்திருக்கின்றான். அந்த ரூபத்தைக் கோவில்களில் பார்க்கின்றோம். தெய்வம் ஒன்றே ஒன்றுதான். அதன் ரூபங்கள் பல. ஆகவே

முன்னவனில் கன்மம் முயன்ருன் இவனென்றே
என்னவனில் எந்தாய் இரங்கா திருந்ததுவே

ஆறுமுகனைக் கண்டு, அதாவது மெய்ப்பொருளாகக் கண்டு, பொய்யுலகைக் கருதாது முக்தி அடையலாம். ப்ரம்மம் வேறல்ல. ஆறுமுகன் வேறல்ல. கண் என்ற வாய்க்கால், உலகை நாடி ஓடினால் வினையாகும்; அவமாகும். ஷண்முகனை நாடி ஓடினால் அதே தவமாகும். இந்தத் தவம் சித்திக்க, பாடல்களில் ஷண்முக விலாஸம் விளக்கமாய்க் காட்டியிருப்பதால், திருப்புகழ், முருகன் ஸ்வரூப தரிசனத்தை நமக்கு ஈந்துவிடும். முருகன் உருவம் திருப்புகழில் பூர்ணமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றது. திருப்புகழ் பாடி, முருகன் உருவம் கண்டு, கண் வழி செல்லும் வினைகளை மாய்த்து, பேரின்பம் பெறுவீர்கள் என்று போதிக்கின்றார்.

பகுதி - 7

மற்றைய இந்திரியங்களின் வெற்றி

இதே மாதிரி முருகன் புகழைக் கேட்டு,செவியில் உலகப் பேச்சு விழாமல் செய்து விடலாம். ஒவ்வொரு இந்திரியங்களையும் முருகனை நாடி அநுபவிக்க விட்டு விட்டால், இந்திரியங்களை ஒட்டாக வென்று விடலாம். இந்திரியங்களை வெல்வதற்கு திருப்புகழ் ஒரு பெரிய உதவியாம் அநுபவ நூல்.

மெய்யழகு

(தென்னாப்பிரிகா - டர்பன் - திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

அழகு அகத்தழகு, புறத்தழகு என இரு வகைப்படும். இந்த இருவித அழகுக்கு மிடையேயுள்ள வித்தியா

• நெஞ்சகம் வேறாகி நினைக்கூட எண்ணுகின்ற
வஞ்சகனுக் கின்பம் எந்தாய் வாய்க்குமா தெவ்வாரே

சத்தை ஒருவாறு விளக்குவாம். ஒரு பட்ட மரம் இருக்கின்றது. அதை அலங்கரிப்பதற்காக செயற்கைப் பூ மாலை, பூங்கொத்து, இலை, கனி முதலியவற்றை அதில் தொங்கவிடுகிறோம். அத்தருணம் அது பார்வைக்கு அழகாய்த் தோன்றினும் நாளடைவில் அதன் புதுமை நீங்கிவிடும். ஏனெனில் அதற்கு உண்மையான உயிர்ச் சத்தி யில்லை. ஆகையால் அது மாறும் இயல்புள்ள பொய்த் தோற்றமேயாகும். இதே அம்மரத்தின் புற அழகு எனலாம். மழை, வெயில், செழிப்பான தரை முதலிய இயற்கை ஆதாரங்களை உட்கொண்டு அதன் பயனாக வெளிப்படும் இலை, தழை, அரும்பு, மலர், கனி முதலியன, அழகிய ஆடைபோன்று பச்சை மரத்தை அலங்கரிக்கின்றன. அந்த அழகு காலத்துக்குக் காலந் தோன்றி பசு மரத்துக்குப் புத்துயிர் அளிக்கின்றது. இதே அம் மரத்தின் அகத்தழகு, அல்லது அந்தரங்க அழகு ஆகும். இத்தகைய அழகே மக்கள் போற்றற் குரியது.

மனிதனின் சௌந்தரியம் அவனுடைய தேக அமைப்பு, மனத் தூய்மை, ஒழுக்க நிறைவு என்பவற்றில் தங்கி யிருக்கின்றது. தேக அமைப்பை அழகு பெறச் செய்வதற்குத் தேகாப்பியாசம் அத்தியாவசியம். நடத்தல், நீந்துதல், குதிரைச் சவாரி, மலை யேறுதல் போன்ற அப்பியாசங்கள் பெரும்பாலும் கையாளப் பட்டு வருகின்றன. சுத்த ஆகாயம், சூரிய வெளிச்சம், நல்லுணவு, ஓய்வு, முயற்சி, அமைதி, ஒழுங்கு முதலியன இயற்கை வாழ்வுக்குச் சாதனங்களாகும். இயற்கை வாழ்வே தேக அழகைச் செம்மைப் படுத்துகின்றது.

பள்ளங்கள் தோறும் பரந்தபுனல் போல் உலகில்
உள்ளம் பரந்தால் உடையாய் என் செய்வேனே

மனிதனின் அழகு, உடல் அமைப்பில் மட்டுந் தங்கி யிருக்கவில்லை அப்படி யிருப்பின் மனிதனுக்கும், மண்ணால் செய்த பொம்மைக்கும் வித்தியாச மிராது. நாகரிக மற்ற ஜாதியார் உடல் அழகு அமையப் பெற்றும், கண்ணைக் கவரத் தக்கவரல்லர். அதற்குக் காரணம் அவருடைய அறிவின்மையே யாம். மன அழகாகிய மதி நுட்பம், உடல் அழகைப் பிரகாசிக்கச் செய்கின்றது. ஆகையால் மன அழகு இல்லாவிடத்து உடல் அழகு ஒளி பெறாது. மலர்ந்த முகமும், கூரிய பார்வையும் அழகுக்கு அணிகலன் போன்றவை. அது பற்றியே நமது ஆன்றோரும், 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' எனக் கூறியுள்ளார். நாம் எண்ணும் எண்ணங்களெல்லாம் நமது முகத்தில் படங்களை வரைகின்றன. தூய சிந்தனை யுள்ளவர்களின் வதனத்தில் பூரிப்பு, முகமலர்ச்சி, கம்பீரப் பார்வை முதலிய படங்கள் வரையப் படுகின்றன. தீய சிந்தனை யுடையோரின் முகத்தில் காமம், குரோதம், கவலை, லோபம், உறக்கம் முதலிய படங்கள் வரையப் படுகின்றன. நமது சிந்தனையும், அதனாலுறுஞ் செயலும் நாள் தோறும் முகத்திலுள்ள மனப் படத்தை மேன் மேலும் வரைந்து, அகத்திலுள்ள அழகையோ அல்லது விகாரத்தையோ வெளிப்படுத்துகின்றது. ஆகையால் நமது கோர எண்ணங்களை யாரு மறியாதபடி மறைப்பது அசாத்தியமான காரியமாகும்.

ஒரு மழை மானியானது, மழை வீழ்ந்த அதே சமயத்தே எத்தனை அங்குலம் மழை பெய்த தென்பதைப் பதிவு செய்கின்றதோ, அதே போல நமது மனமானது,

---

வல்லாளா மோனா நின் வான்கருணை என்னிடத்தே
இல்லாதே போனால்நான் எவ்வண்ணம் உய்வேனே

நாம் சிந்தனைகளைச் சிந்திக்கும் பொழுதே முகத்தில் படம் வரைந்து விடுகின்றது. மனிதனுக்கு விகாரத்தை யுண்டாக்கும் நரைதிரையே இப் படங்களாகும். மேற்றிசைத் தத்துவ ஞானியாகிய ஷோபன் ஹோர் என்பார், 'மனிதன் எண்ணமுஞ் செயலும் அவன் முகத்தில் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. அவனைப் பற்றி அறிய வேண்டிய விஷயங்களை அவனுடைய முகப் படத்திலிருந்து அறியலாம்' என்றும், தோறியோ என்னும் பிரபல ஞானியார், 'நாம் அனைவரும் சிற்பிக ளாவோம். அத் தொழிலுக்கு உபயோகிக்கும் பொருள் நமது தசை, எலும்பு, இரத்தம் என்பனவாம். மனுஷத்துவம் வன்மையையும், மிருகத்வம் விகாரத்தையும் முகத்துக்கு அளிக்கின்றது' என்றும், உவில்லியம் கனற் என்பார், 'பாவமாகிய கலப்பை பூட்டி உழப்பட்ட விகார வதனம், நரகத்தின் வெளிப்படையான காட்சியாகும்' என்றும் கூறி யிருக்கின்றனர்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனுடைய முகமானது அவனுடைய உள்ளக் கிடக்கைகளை எங்ஙனந் தெரிவிக்கின்றதோ, அதே போல் அவனுடைய ஒழுக்கத்துக்கும் அறிகுறியா யிருக்கின்றது வீரம், பெருமிதம், அன்பு, உற்சாகம் போன்ற நற்குணங்கள், ஒருவித பிரபையை உண்டாக்குகின்றன. இடையறா முயற்சியும், பூரண ஆனந்தமும், சாதாரண மனிதனையும் சௌந்தரியம் அடையுச் செய்யும். தூய சிந்தனையானது, ஒருவனை நன் முயற்சிகளில் தூண்டுகின்றது. நன் முயற்சியின் பயனாக அதன் தயை, தாக்ஷண்யம், அன்பு என்னும் நற்குணங்

வாக்கும் மனமும் மவுனமுற எந்தை தின்னை
நோக்கும் மவுன மிந்த நூலறிவில் உண்டாமோ.

களைப் பெற்று, அதன் மூலம் ஆத்மீக அழகைப் பெறுகின்றான். தாய் குரூபி யாயினும், பிள்ளைக்கு அவள் அழகுத் தெய்வமாகவே தோன்றுகின்றாள். அவள் அழகுக்கு அடிப்படையா யிருப்பது, பிள்ளை மீதுள்ள பேரன்பே யாம். உலகப் பிரசித்தி பெற்ற எமர்ஸன் என்னும் பெரியார், 'ஆண்டவன் தர்மத்தின் மேலிடும் முத்திரையே அழகு' என்றும், பிரௌன்ஸன் அல்கொட் என்பார், 'நாங்கள் புண்ணிய சீலர்களா யிருந்தால் அனைவரும் அழகரா யிருப்போம்' என்றும் கூறியுள்ளனர்.

மனிதனுக்கு ஆத்மீக அழகை அளிப்பது சமயம். மெய்ச் சமயம் ஆத்மாவில் அன்பும் விசுவாசமும் உண்டாக்குவதால், முகத்தை அழகு பெறச் செய்கின்றது. பொய்ச் சமயம் ஆத்மாவில் பயத்தை ஏற்படுத்துவதால், முகத்தை விகாரப் படுத்துகின்றது. தயை, நன்றி, நம்பிக்கை, ஆர்வம், வீரம், வணக்கம், அடக்கம் முதலியன, விகாரத்தைப் போக்கி முக மலர்ச்சியை அளிக்கின்றன. ஆகையால் நாம் எல்லோரும் இவ்வுலகில் மெய்யழகைப் பெற்று இன்பமடைய முயல்வோம்.

அதிசயம் அநேகமுற்ற பழநி (8)

திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B. A., B. T.

106 - ஆம் பக்கத் தொடர்ச்சி

ஞான மலையாகிய இத்தலம் பல வேறு திருநாமங்களால் அழைக்கப்பட்ட போதிலும், 'பழநி' என்ற ஒரே பெயர் இன்று வழக்காற்றில் இருந்து வருகிறது. இத்திரு

ஒன்றாய்ப் பலவாய் உலகமெங்குந் தானேயாய்
நின்றாய் ஐயா என்னை நீங்கற் கெளிதாமோ.

நாமம் பொதுவாக வழங்கப் பட்டாலும், இத் தலம் மூன்று பிரிவுகள் கொண்டது. அவை:— (1) பழனுபுரி (ஊர்); (2) திருவாவினன்குடி (தாழக் கோயில்); (3) பழனி மலை என்பனவாம். இறைவனை முருகன் ஒருவனிடம் மூவுலகும் அடங்குவன போல, 'பழனி' என்ற ஒரு திருப் பெயர் மேற் கூறிய மூன்று பிரிவுகளையும் அடக்கி நிற்கிறது.

பழனுபுரி :—

பழனுபுரி என்பது மலையைச் சார்ந்துள்ள நகரைக் குறிக்கும். பழனி புகைவண்டி நிலையத்தி லிருந்து மலைக்குச் செல்வோர், பழனுபுரி வழியே செல்ல வேண்டும். பழனு புரிக்கென மூன்று திருப்புகழ்ப் பாடல்கள் உள. இந் நகரின் மேற்கில், பெரிய நாயகி அம்மை திருக்கோயி லிருக்கிறது. தேவி சன்னதிக்கும், கைலாச நாதர் சன்னதிக்கும் இடையில், கஜவல்லி வனவல்லியாருடன் முருகவேள் எழுந்தருளி யுள்ள சன்னதியும் உள்ளன. இதனைத் தரிசித்த அருணகிரியார்

'பழய பார்வதி கொற்றி
பெரிய நாயகி பெற்ற
பழனி மாமலை யுற்ற — பெருமாளே'

எனப் பாடினர்.

திருவாவினன்குடி :—

இது தாழக் கோயில். இது, திரு - இலக்குமி, ஆ - காமதேநு, இனன் - சூரியன், கு - பூதேவி, டி - அக்கி என்பவர்கள் பூசித்ததால் இப்பெயர் பெற்றது. இதனை

ஆவித் துணையே அருமருந்தே எந்தனை நீ
கூவியழைத் தின்பங் கொடுத்தாற் குறைவாமோ.

அக்கோயிலிலுள்ள திருவுருவங்கள் நினைப்பூட்டா நிற்கும். இவ்வாலயத்தின் தொன்மை, திருமுருகாற்றுப் படையில் திருவாவினன்குடி மூன்றும் படைவீடாக இடம் பெற்றிருப்பதால் இனிது விளங்குகிறது. இங்குள்ள மயிலேறும் இறைவன் குழந்தை வேலாயுதனுய்க் காட்சி யளிக்கிறன். இப்போதுள்ள திருப்புகழ்ப் பாடல்களில் பன்னிரு பாடல்கள் திருவாவினன்குடிக் குரியவை. பழநி மலையைத் தரிசிக்கு முன் உள்ளும் புறமும் தூய்மையாக்கிக் கொண்டு செல்ல வேண்டுவதவசியம். ஆதலால் மனமாசு கழுவும் திருவாறெழுத்தின் பெயர்கொண்டு, புறமாசகற்றும் புனித நீர்த் தடாகம் 'சரவணப் பொய்கை' காட்சி யளிக்கிறது. இஃதன்றியும் வையாபுரி ஏரி, ஷண்முக நதி, வரத்தாறு முதலியவைகளும் உள்ளன. அவற்றிலும் நீராடி பழநி நாதனை வழிபடச் செல்வர்.

மலையடிவாரம் :—

ஞான தத்துவத்தின் முன்னர் தோன்றுவது புத்தி தத்துவம். ஆதலின், ஞான பண்டிதனை பழநிப் பெருமானைத் தரிசிக்கு முன், புத்தி தத்துவ தலைவனை பாத விநாயகரைத் தரிசித்தல் வேண்டும். அங்கிருந்து மலை வலம் செய்யச் சமார் ஒன்றேகால் மைல் சுற்றளவுள்ள கிரி வீதிக்கு வர வேண்டும். இருமருங்கும், மல வாசனை அகற்றி உயிர்களைப் பக்குவப் படுத்த ஞான வாசம் வீசும் 'உருன் பூ' என்னும் கடப்ப மலர்ச் சோலைகளே காட்சி வழங்கும். 'யானை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே' என்பது போல, 'முருகன் வரும் பின்னே

எத்தனையோ நின்விளையாட் டெந்தாய்கேள் இவ்வளவென்று
அத்தனையும் என்னுல் அறியுந் தரமாமோ.

கடம்பின் முருகு (வாசனை) வரும் முன்னே' என்று கூறலாம் போலும்.

மலையைச் சுற்றிலும், நாற்புறங்களிலும் அருள் மேகத்தை நாடிய வண்ணம் அமைந்திருக்கும் மயில் மண்டபங்கள் உள. மயில் நீல நிறம். நாத தத்துவத்தின் நிறம் நீலம். முருகன் செந்நிறம். ஞான(க் கனலின் தத்துவ) நிறம் செம்மை. ஆதலின், நாதஞ் சூழ்ந்து கடந்த ஞான மாவான் தண்டபாணி என்பது உணர்த்தியவாறும்.

பழநி மலையைத் தரிசிக்க வேண்டிய முறையைப் பின் வரும் பாடலில் படித்து மகிழுங்கள்.

“தருமிரவி உதயமது கண்டுவை காபுரி
தனைக்கண்டு சத்தி கண்டு
சண்முகப் புனல்கண்டு நியமாதி கண்டுபின்
சரவணப் பொய்கை யாடி
அருள்பெருகு மாவிநன் குடிகண்டு கைலாசர்
அம்மை பெரியம்மை கண்டு
அம்பொன் மலை கண்டதி விடும்பர்சந் நிதிகண்டங்
கநேககண் காட்சி கண்டு
கருணைகண் டருள்வள்ளி தெய்வயா னையைக்கண்டு
களிகண் டிருக்கு முன்றன்
கமலபா தங்கண்ட பேரொருக் காலுமக்
காலனைக் கண்டிடுவரோ
பரிதிவலி கண்டவன் தனைவென்ற தம்பிதன்
பராக்ரமங் கண்ட துரையே
பழமறைசொ லியசில தொழுமவர்க ளநுகூல
பழநிமலை வடிவேலனே

(வடிவேலர் சந்நிதி முறை)

பற்றினைப் பற்றும் எந்தாய் பற்றுவிட்டாற் கேவலத்தில்
உற்றுவிடும் நெஞ்சம் உனை ஒன்றி நிற்ப தெப்படியோ.

மலை வலம் வந்த காலம், அருணை முனிவ ரருள் பெற்ற பழனி மலை மீதேறிக் காணும் அற்புத காட்சிகளை அடுத்த இதழில் காண்பாம்.

பக்தியும் இசையும்

(கீழ்வேளூர் - மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)

8-வது கர்த்தா. ராகம்

ராகம் : தோடி.

தாளம் : ரூபகம். ஒருகளைச் சவுக்கம்.

அரை இடத்தில் ஆரம்பம்.

ராகாங்க ராகம் : சம்பூர்த்தியான ஏழு ஸ்வரங்களையும், ஆரோஹண, அவரோஹணமாகக் கொண்டது.

ஆரோஹணம் : ஸ ரி க ம ப த நி ஸ.

அவரோஹணம் : ஸ நி த ப ம க ரி ஸ.

இந்த ராகமானது சம்பூர்த்தியாக உள்ள ராகாங்க ராகமெனப்பெறும். மற்றும் ரி க ம த நி என்கிற ஐந்தும் கோமள ஸ்வரங்களைக் கொண்டது. மேலும், கனிந்த மனப்பாங்கை உடைய கருணாரச பாவத்தையே தனக்கு முதல் பார்வையாக உடையது. ஆயினும், ராகாங்க ராகம் என்னும் இலக்கணத்திற்குப் பொருந்த, கனிந்த உள்ளக் கிடக்கையை உடைய, பல சந்தர்ப்ப உணர்ச்சிகளை உணர்த்த, தன்னிடத்தில் மற்றும் சில, மேலே

---

* ஒப்பிலா ஒன்றே நின் உண்மை யொன்றும் காட்டாமல்
பொய்ப் புவியை மெய்போற் புதுக்கி வைத்த தென்னேயோ

சொல்லப்பட்ட தன்மையிலேயே ஒலித்து, அன் பொழுகப் பேசி, அன்பு முறையிலேயே பல சந்தர்ப்ப நிலைமைகளை உணர்த்தவல்ல, வன்மை, மென்மை, இடைமை யென்னும் மூன்று பாவ உணர்ச்சிகளை உடையதாகும்.

இந்த தத்துவத்தை ஸ்ரீத்யாக ப்ரமம் நன்கு விளக்கி, தோடி ராகத்தில் ஒன்றில் மட்டும் அநேக கீர்த் தனங்கள் இயற்றி, மக்கட் பகுதியினருக்கு அறிவித் துள்ளார். அவருடைய தோடி ராகக் கீர்த்தனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாவ நுணுக்கத்தைக் கொண்ட தாகவே இருக்கும்.

மற்றவர்கள் கீர்த்தனங்களில் இம்மாதிரி இசை நுட்பம், நுண்மை நயம் காணப்படவில்லை.

இசை இலக்கியத்திற்குத் தெய்வீக ஒளியான ஸ்ரீத்யாக ப்ரும்ம மார்க்க நுணுக்க அறிவே, நமக்கு உண்மையான இசையின் இன்ப நுகர்ச்சியைத் தருவ தோடு, உலகெலாம் கண்டு ஆச்சர்யப் படத்தக்க அழியாப் பெருமையை அளிக்கவல்லதும் ஆகும். கவனிக்கவும்.

மற்றும் எழுபத்திரண்டு கர்த்தா ராகங்களும், அத னின் ஜன்யங்களும் சேர்ந்து பதினோராயிரத்துத் தொள்ளா யிரத்துத் தொண்ணூற்று ராகங்கள்; நவரச பாவ பிரிவிற்கும், அதனதன் ஏற்றத் தாழ்வான உணர்ச்சித் தத்துவ வெளியீட்டிற்கும், இசை இலக்கண முறைப்படிக் கணித்திருந்த போதிலும், சப்த ஸ்வரங்களிலும் இருந்து முதன் முதலாகக் கணிக்கப் பட்ட, ஆறு ராகாங்க ராகங் களே இசைப் பகுதியின் முதலும், முடிவும் ஆகும். இந்த

காரைல் வழிநடவுங் காலத்தே கண்மூடித்தாற்
போலே எனதறிவிற் போந்தறிவாய் நில்லாயோ

ராகங்கள்தான் கடல் மடை திறந்ததுபோல் அளவற்ற கற்பனைகட்கு இடந்தந்து, நவரசங்களையும் உணர்த்தி, இக பர உணர்ச்சிப் பேச்சுக்களுக்கு உதவி, மக்களையும் தெய்வத்தையும் மகிழ வைத்து, இன்பம் நல்க வல்ல எல்லா நயங்களையும் உடையதாகும்.

அந்த ஆறு ராகங்களில் ஒன்று தோடியாகும். அதிலும் அன்புமனப் பான்மையில், கோமளத் தன்மையில், உணர்த்தும் இசை நயப் பண்பமைந்த ஒலிச் சேர்க்கையை உடையது.

பல்லவி

ஆரகிம்பவே பா லாரகிம்பவே (ரகு)

அநுபல்லவி

வீர ஜநகஜா கர பவித்ரிதமென

வெலக பா—லாரகிம்பவே.

சரணம்

ஸாரமைந திவ்யாந்நமு

ஷட்ரஸயுத பக்ஷணமுலு

தார ஸோத ராதுலதோ

த்யாக ராஜ விநுத பா—லாரகிம்பவே

உன்ன உன்ன என்னை எடுத் துள்விருக்கு நின்னிலறைகை
இன்ன பின்னக் காணுமல் எந்தாய் கழல்வேனே

கருத்துரை விளக்கம்

ரகுசூர்ய குலதிலகனாய் அவதரித்த ராஜாதிராஜனே! நீ (ஆரம்பவே) அருந்துவாய்; (பாலாரம்பவே) இந்த பக்குவம் செய்யப்பட்ட பசுவின் பாலை அருந்துவாய் ஐயா!

(வீர ஜநகஜா - உண்மையான வீரம் என்று சொல்லத் தக்க ஆத்மீக வீரமும், உலக சக்ரவர்த்தி என்பதற்கு ஏற்ப மக்களை மாண்புறக் காப்பாற்றும் தோள்வலியும் ஒருங்கே அமையப் பெற்ற ஜனக மகாராஜன் புத்ரியாகிய ஜானகி தேவியாரின்; (கரபவித்ரிதமௌ-லைகபட்டதால் மிகவும் விசேஷம் பொருந்தியதான; (வெள்ள பாலாரம்பவே - நன்றாகக் காய்ச்சப் பெற்று, அதனிடத்தில் உள்ளதான ஜல சத்தானது சுண்டப் பெற்று, அதனின் விசேஷத் தன்மையான வெண்மை மிதக்கும்படியான ருசியை உடைய இந்தப் பாலை, நீ அருந்துவாய் ஐயா!

(ஸாரமைன இவ்யாந்நமு — வெறும் அன்னமல்ல; சித்ரான்னங்கள் என்று சொல்லப் படுகின்ற சத்துக்களையும் கலந்து பக்குவப் படுத்தப் பட்ட, இன்னும் எவை எவைகள் எந்தெந்த அளவு சேர்க்க வேண்டுமோ, அந்தந்த அளவு சேர்த்து, உனது நாவிற்கு அமுதம் போன்று ருசிக்கத் தக்க வகையில் மிகவும் திவ்யமாக இருக்கும்படி, மிகவும் ஜாக்கிரதையாகச் செய்யப்பட்ட இந்தச் சித்ரான்னங்களையும்; (ஷட்ரஸயுத பக்ஷ்யமுலு - இன்னும் அறுவகை ருசியை உடையதான பலகாரங்களையும் (அதாவது சிற்றுண்டிகளையும்); (நா

ஆரா அமுதனைய ஆனந்த வாரி என்பால்
தீராமல் ஐயா நீ தன்னிவிட வந்த தென்னே.

ஸோத ராதுலதோ-உன்னுடைய மனைவியாராகிய ஸீதா பிராட்டியாரோடும், உனது தம்பிமார்களோடும் புசிப்பாய் ஐயா! (த்யாகராஜவினுத - இந்த த்யாகராஜனால் பெருமை பெறப் பேசித் தோத்தரிக்கப் படுபவன் நீ ராமா என்பது பொருள்.

கருத்துள்ளுரை

இந்தக் கீர்த்தனத்தில் ஒரு உண்மை விளக்கப்படு கிறது. அஃது என்னவெனின், நன்றாகக் காய்சசி வெண்ணெ வெளிப்பட்டு மிதக்கும்படியான தன்மையில் உள்ள பாலே, வீரத்திலே தலைசிறந்த வீரனுகிய ஜனக மகா ராஜனுக்குப் புத்ரியாய்ப் பிறந்த உனது மனைவியா ராகிய ஜானகி தேவியாருடைய கையினுல், உனக்குத் தரச் சொல்லி கேட்டுக் கொண்டு உள்ளேன். அவர்கள் தரு வார்கள். நீ அருந்த வேண்டும் ப்ரபோ என்று வேண்டிக் கொள்கிறுர்.

மற்றும் சித்ரான்னங்களேயும், அறுசுவையினுல் ஆக் கப் பெற்ற பக்ஷண வகைகளேயும் நீ முதலில் உண்டு, பின் உனது மனைவியா ராகிய ஸீதா பிராட்டியாரும், அடுத்து தம்பிமார்களும் உண்டு மகிழ வேண்டும் ஐயனே என்று, ஏதோ முறை வகுத்து வேண்டிக் கொள்கிறுர் த்யாக ப்ருமம்.

பக்தராகிய த்யாக ப்ருமம், தன் கையினுல் சத்வகுண உணவாகிய பாலே ஸ்ரீ ராமபிரானுக் குக் கொடுத்தால், துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனர்த்தம் அவதரித்த ஸ்ரீராமபிரான் ஸத்வ குணக்குனுக ஆகிவிட்

பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞான மன்றில் ஆடுகின்ற அழகனே

டால், அதர்மர்களை அழிக்கும் வன்மையுடையவனாக எப்படி இருக்க முடியும் என்பதை உத்தேசித்தே, சக்தியின் பிறப்பிடமாகிய ஸீதாதேவியாரின் கையின் மூலமாக கொள்ள வேண்டு மென்கிறார். (தாய்க்குப் பின் தாரம் என்ற தத்துவப் பேச்சிலும் உண்மையிருக்கிறது;) உண்மையிலேயே உணவில் எவ்வளவு சத்துக்கள் இருந்த போதிலும், அன்பு என்கின்ற சத்து கலந்து அளிக்க வல்ல குணப்பண்பு, தாய்க்கும் மனைவிக்கும்தான் உரியது என்பதனை உணர்த்தியும்; ஸ்ரீ த்யாக ப்ரும்மம், சத்வ உணவாகிய பாலை, தன்னுடைய வீர பலத்தையும், அன்பு உணர்ச்சியையும் கலந்து கொடுத்து, ஸ்ரீராமன் வீரனில் வீரனாக இருக்க வேண்டும் என்கின்ற கருத்தை அதனில் புகுத்தி, தன் கையால் கொடுக்காமல் ஸ்ரீ ஜானகிதேவியாரின் கையினால் கொடுக்கச் சொல்லி உபசரித்துள்ளார்.

மற்றும் சித்ரான்னங்களையும், அறுசுவை உண்டியையும் முதலில் ஸ்ரீராமபிரானை உண்ணச் செய்து, மறுபடி ஸீதா தேவியாரையும், தம்பிமார்களையும் உண்ணச் செய்யக் கேட்டுக் கொண்டுள்ளார். இதனின் உண்மைத் தத்துவம் என்னவெனின், முதலில் வீட்டின் தலைவனுக்கு உணவளித்துப் பின் வீட்டின் தலைவி உண்ண வேண்டும் என்பதுதான் மரபு. மற்றும் தம்பிமார்கள் ஆகிய மற்றவர்கள் முறையே உண்டு, பெரியவர்கள் உண்ட சிஷ்டமாகிய ஸ்ரேஷ்ட உணவை உண்ண வேண்டுமென்ற நியதிப்படியே யாரும்.

தற்போது இந்த தெய்வீக உண்மையினை உணராது, சமையற்காரன் என்கின்ற ஒருவனைக் கொண்டு சமைத்து,

---

ஏதுந் தெலியா ஏனை மறைத்த வல்லிருளை
நாத நீ நீக்க ஒரு ஞானவிளக் கில்லையோ

அவன் கையில் வாங்கி உண்டு வாழும் நிலைமைக்கு வந்து விட்டார்கள் மக்கள். அதனால் நம் நாட்டவர்களில் பலர் ஆண் தன்மையின்றியும், பல நோய்கட்கு ஆளாகியும் துன்பப்படும் நிலைமைக்கு ஆளாகிவிட்டார்கள் அல்லவா?

ஆகவே, உணவு யார் கையினால் கொடுக்கப் பெற்று உண்ண வேண்டும் என்பதும், எவரெவர்கள் எம்முறையில் ஒருவர் பின் ஒருவர் உண்ணுவது உண்மையான நலச் சிறப்பைத் தரும் என்பதனையும், த்யாக ப்ரும்மம் உபதேசிப்பதோடு, குறிப்பாகப் பாலைக் கணவனுக்கு யார் கொடுக்க வேண்டும் என்பதனையும் மிகவும் நுணுக்கமாக நமக்கு எடுத்துரைத்து, நல்வாழ்வு வாழ உணர்த்தியுள்ளார் என்பதனைக் கருத்தில் கொண்டு நடந்துகொள்ள வேண்டுமென்பது, இதனால் பெறப்படும் அரிய பெரிய உண்மையாகும்.

குறிப்பாக ராமபிரானுக்கு வீர தத்துவம் இருக்க வேண்டும்; வீரம் இருவகை; அவை தண்ட வீரம், காப்பு வீரம் எனப் பெறும். ஜனகன் ராஜ ரிஷியாக, நாட்டிற்கு அரசனாக, மேல் வீட்டிற்குத் தலைசிறந்த பக்த யோகியாக இருந்து அரசு செலுத்தியவர்; அவர் குமாரி யல்லவா ஸீதை. ஆதலால், அவளுடைய கையினால் கொடுக்கப் பெற்று உண்ணுவதே சரணாகத வத்ஸலனை ஸ்ரீராமபிரானுக்கு, துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்யும் வீரத்தை விளைவிக்கும் என்பதே பரம ரகஸ்யமான உண்மையாகும்.

இந்தக் கருத்துள்ள பாட்டை, தோடி ராகத்தில் இணைத்துப் பாடியுள்ள நயம்தான் அருமை. ராமபிரா

பணியற்று நின்று பதைப்பறஎன் கண்ணுள்
மணியொத்த சோதிஇன்ப வாரிஎனக் கில்லையோ

னுக்குப் பாலை நைவேதனம் செய்ய எண்ணிய எண்ணம், இந்தப் பாலை அருந்தி நல்ல தேக ஆரோக்ய முடையவனாய் ராமபிரான் இருக்க வேண்டும் என்கின்ற தோடு, அளவிலா அன்புடைய த்யாக ப்ரும்மம், அந்த இயற்கைப் பண்பு தொனிக்க, இயல், இசை, பாவ உணர்ச்சி ஒன்ற, அருமையாக, (அதாவது தாயுள்ள மனப் பான்மைக்குச் சென்று,) தோடி ராகத் தொனியில், மிகவும் கனிந்த அன்புமனப் பான்மையில், அருந்துவாய் இந்த அன்பு கலந்த பாலை; நன்றாகச் சுண்டக் காய்ச்சிப் பக்குவம் செய்துள்ளேன்; சிறிதும் குறையில்லை. மற்றும் வீரத்தின் பிறப்பிடமாகிய உனது மனைவியாராகிய, இருவித வீரத்திலும் தலைசிறந்த ஜனக மகா ராஜனின் புத்ரியாகிய ஜானகிதேவியாரின் கையினால் கொடுக்கச் செய்துள்ளேன்; அருந்துவாய் ஐயா! அருந்துவாய் ஐயா என்று மிகவும் அன்பொழுக வேண்டிக் கொள்கிறார் த்யாகப் ப்ரும்மம்.

மற்றும் இந்தப் பாட்டை, திஸ்ர ரூபமான, சதுஸ்ர கதி நடையில், ரூபக தாளத்தில், அரை இடத்தில் ஆரம்பித்துப் பாடியுள்ளார். இதனின் நுண்மை, பால் சத்வ உணவு; அன்பையும், ம்ருது உணர்ச்சி உந்திய உள்ளக் கிடக்கையையும், (அந்தப் பாலில்,) வீரத்தின் பிறப்பிடமாகிய தேவியார் வாயிலாகப் பருகி, ராமன் இணையிலா வீரனாக இருக்க வேண்டும் என்கின்ற மனப்பான்மையைத் தெரிவிக்க, க்ஷத்ரிய உணர்ச்சியைக் குறிக்கும் திஸ்ரரூப தாளத்தில் இணைத்து, தாள, கால, கதி, இட இலக்கணப் பண்பு பொருந்த உபதேசித்துள்ளார் த்யாக ப்ரும்மம்; கவனிக்கவும்.

எம்மால் அறிவதற எம்பெருமான் யாதுமின்றிச்
சும்மா இருக்க ஒரு சூத்திரந்தான் இல்லையோ.

மதுரை நாவலர்

ரசபதி

நாடும் நகரும்.

வெண்பொழில் மூவர் தண்பொழில் வரைப்பது தமிழகம். செந்தமிழ் நாடு என்று சிறப்பிக்கப் பெறுவது பாண்டி நாடு. படைப்பு நாள் முதல், மேன்மையுற்று வந்த பாண்டி மன்னர் தலைநகரம் மதுரை. சிவபிரானுடன் புகழ்பெறு புலவர் பலர், சங்கமிருந்து அமுதினு மினிக்கும் தமிழை ஆய்ந்த பெருமை மதுரைக்கு உண்டு. அந்த இனிய புலவர்கள் பாடித் தொகுத்தது எட்டுத் தொகை. அதனுள் ஒன்று பரிபாடல். அதனில் உள்ள எழுபது பாக்களுள், வைகைக் கென்றும் தனக் கென்றும் முப்பது பாக்களை, வரைந்து கொண்டது அத்தலம். விமலன் விமலை உக்ர குமாரர் ஆண்ட அப்பதியில், வேளாண் பெருமகர் ஒருவர் இருந்தார்.

வாழ்க்கை வளம்.

குற்றம் குறை யின்றி தமிழை முற்றக் கற்றவர் அவர். முன்னோர் தேடிவைத்த அரும் பெரும் பொருள் அவர்க்கு உண்டு. அருந்ததி போன்ற குணவதி அவர் தேவி. மழலை மொழியால் மகிழ்விக்கும் மக்கள் நால்வர், அம்மா அப்பா என்று குதூகல மிகுந்து இருவரிடமும் கொஞ்சி விளையாடுவர்.

சமயாசாரம் கைவந்த அவர், ஸ்ரீ மீனாட்சி யம்மையையும், சோமசுந்தரப் பெருமானையும் பாடித் தொகுத்த பாடல் பல. எளிய நடையில் உள்ள அவர் பாடல்கள், உள்ளம் உருக்கும் தன்மையன. அதனால், வரவர அவர் சொந்தப் பெயர் மறைந்தது; மதுரை நாவலர் என்ற பெயரே நிலைத்தது.

தடைமீறிய கொடை.

கற்றவர் வறுமையைக் காண்கிற போதெல்லாம், அவர் உள்ளம் கசியும். கசிவு, வரையறை யின்றி அவர்கட்குப்

---

* நாய்க்குங் கடையானேன் நாதா நின் இன்பமயம்
வாய்க்கும்படி இனியோர் மந்திரந்தான் இல்லையோ

பொருளை வழங்க வைத்தது; கலைமகள் அருளும், திருமகள் நோக்கும், உமையின் உளமும் ஒருங்கு பெற்ற உத்தம சிவபக்தர் என்று, அவர்க்குப் பாவலர் சூட்டிய பாமாலையும் பல.

வழங்குவதற்கும் ஒரு வரம்பு வேண்டும்; இறைக்கும் கேணி சுரக்குமெனினும், அளவு கடந்து இறைத்தால் வற்றுவது இயற்கை; அளவாக எதையும் செய்யுங்கள் என்றனர் உறவினர்.

அப்படியா? நான் என்ன செய்யமுடியும்!

இரப்பவர்க்கு ஈய வைத்தார்; ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்

என்று தமிழ்மறை கூறுவதை நீங்கள் கேட்டதில்லையோ என்று, நகைக்கின்றார் காவலர்.

அது ஏட்டில் உள்ள செய்தி; அனுபவத்திற்குப் பொருந்தாது; எங்களுக்கொரு நஷ்டமில்லை; உங்கள் எதிர் காலத்தை உத்தேசித்துத்தான் இவ்வளவும் உரைக்கின்றோம்.

இருக்கலாம்! பிறக்கும் பொழுதும் கொண்டு வந்ததில்லை; இறக்கும் பொழுதும் உடன் வருவதில்லை. வெயிலுக்கு உதவா உடம்பின் வெறுநிழல் போல்வது செல்வம்; இடை வந்த அதனை, வேரில் நீர் விடுவதுபோல், தக்க இடம் பார்த்துத் தருவது நன்மையைப் பயக்கும் அல்லவா!

பிறக்கும் பொழுதே பொருளைக் கொண்டு வரவில்லையென்பது உண்மை; அதனைப் பெறுதற்குரிய ஊழொடு வந்தவர் நீர்.

அன்றைய ஆகூழ், இன்று பொருளை உதவியது; பெற்ற பொருள் கொண்டு, இனியும் ஆகூழ் விளைவிற்கு முயல்வதுவே அறம்.

இங்ஙனம் உறவினருடன் வளர்ந்தது வாதம்.

விதியின்படி ஆகும் விளைவு என்று விலகினர் உறவினர். மற்றவர் தடுக்கத் தடுக்க, மதுரை காவலர்க்கு ஈகையில் சிந்தனை

ஊனாக நிற்கும் உணர்வை மறந் தையா நீ
தானாக நிற்க ஒரு தந்திரந்தான் இல்லையோ

வளர்ந்தது. அதனால், கற்றவர்க்கும் மற்றவர்க்கும், துறவிகட்கும் வாரி வழங்கலே தொழிலானார்.

பரமன் மேல் அவர் பாடியுள பாடல்களை மனனம் செய்து, கோயில்களில் பாடுகின்றோர் பலர்; அவைகளின் நுட்பங்களை ஆய்வாரும் சிலர் உளர். பெருஞ் செல்வ மேதை யென்று பேசுகின்றோர் பலர்; அவருடைய உள்ளத் தூய்மையை உணர்கின்றவரும் ஒரு சிலர். அவருடைய புகழ், இங்ஙனம் அந்நாளில் எங்கும் பரவி யிருந்தது.

குந்தித் தின்றால் குன்றும் மாளும் என்பது பழமொழி. அதனுடன் ஓயாது கொடையும் செய்தால், இருக்கும் பொருள்கள் கரைவது இயற்கை. குணநலம் சிறந்த மனைத்துணைவி, கொண்டான் கொடையில் குறுக்கிடுவதில்லை. அவர் மார்க்கம் அறம்; அதை எவரும் தடுப்பது ஆகாது என்று, மறுத்தவர்க் கெல்லாம் வாய்ப் பூட்டிடுவள். இளங் குழந்தைகள் கதி என்னாவது எதிர் நாளில் என்றார்கள் அவள் தாய் வீட்டார்; எவ்வுயிரும் காக்க ஓர் ஈசன் உண்டோ இல்லையோ என்று சீறுகின்றாள் அந்த அம்மை. அதன் பின் அவர்களும் அஞ்சி யகன்றனர்.

வறுமையில் செம்மை.

குடும்பத்தின் சொத்தான நிலபுலங்கள் விலை போயது; ஆடை யணிகள் கொதுவை புகுந்தன. வரவர வறுமை வளர்ந்தது; கொடுப்பார் உளரானால், கையேந்துவார்க்குத்தான் குறையில்லையே. அவர் சூழ்நிலையை உணராமல், தம் வறுமை காரணமாக, யார் யாரோ அவரிடம் வந்தபடியே யிருந்தனர்; அந்நிலைமையிலும், இயலும் அளவு உதவுவதில் அவர்க்குப் பூரண திருப்தி.

ஒருநாள் வீட்டில் சமைக்க அரிசி யில்லை. அடுத்த வீட்டில் கடன் வாங்கி அன்றைய சமையல் நடந்தது. இப்படியே சிலநாள் நிகழ்ந்தன. இச்சமயம் பார்த்து, உறவினர் இடிப்புரை யாடினர்; உதவி மறுத்தனர். நாவலர் உள்ளம் நலிந்தது. நகை நயம்

அல்லும் பகலும் அகண்டவடிவே உன்னைநான்
புல்லும் படி எனக்கோர் போதனைதான் இல்லையோ

அறியாத, கலை உணர்விற்கு அயலான, வாய்மைச் சமய சிந்தனை வழுவிய எவர் மனமும், இங்ஙனந்தான் குறைகூறும்; இவர்களிடம் ஆதரவு எதிர்பார்ப்பதும் தவறு; புகல் புக இறைவன் உளன் என்று உணர்கிறது உள்ளம்.

ஆறுதல் நெறி

மாலை ஏழு மணி. ஆலயத்தில் மணிகள் கணகண என்று ஆனந்த கீதம் பாடுகின்றன. பக்த ஜனங்கள் ஹரஹர என்று நாம சங்கீர்த்தனம் செய்கின்றார்கள்.

வந்தனை செய்வார் மனக்கவலை மாற்றி, வழங்குவை செல்வமென்
றுறவோர்
முந்திய கலைகள் முழங்குவ முன்னி, முதல்வநின் திருமுனர் அடைந்தேன்
பந்தனை செல்வம் பிறர்க்குத வற்குன் பங்கயத் தாளிணை யடியேன்
சேர்ந்தமென் றுணர்வேன் அங்கயற் கண்ணி சுந்தர அருள்மறைத்
துரையே!

உனதடிமலர் எனக்கு உரியது; இல்லையெனக் கைவிரிக்க மனம் இசையவில்லை; வருவார்க்குப் பொருள் வழங்க அருள் என்று ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் திருமுன் வீறிடுகின்றார் நம் காவலர்; ஊனெலாம் என்பில் உள்ளெலாம் உருக, இங்ஙனம் பத்துப் பாடல் பாடி முறையிட்ட பின், ஆலயத்தை வலம் வந்து தம் மாளிகையை யடைந்தார்.

கடவுள் கனவு.

இரண்டொரு அணிகள்தான் மிச்சம்; அவைகளை விற்று அன்றைய வாழ்க்கை நிகழ்ந்துளது. அதனை யறிந்தார். மனையாள் எத்தனை வேண்டியும், வயிறு சரியில்லை யென்று போக்குரைத்து, பருகும் நீரையும் மறுத்துப் படுத்தார். இதயம் அங்கயற் கண்ணி மணாளனை வந்தித்து இருந்தது.

விடியற் காலம். நல்ல ஒரு கனவு. கோயிலில் ஒருபுறம், அலங்கரித்து வைத்திருக்கும் உற்சவ மூர்த்தியைக் கைகுவித்துக் கும்பிடுகின்றார் காவலர்.

கண்டவடி வெல்லாநின் காட்சி என்றே கைகுவித்தும்
பண்டுமின்றும் நின்றனனைப் பார்த்திரங்க வேண்டாவோ

என்னைப் பார்! இதனைக் கேள் என்று செவிக்கின்பம் செய்யும் ஒரு இனிய குரல், காற்றில் மிதந்து வந்தது. திடுக்குற்று நாற்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்தார்.

என்ன வியப்பு! திருவுருவமே பேசுகிறது.

பிரபோ! உமது அழைப்புத்தானா?

ஆம்; கேள்! திருவாவினன் குடிக்குச் செல்; அங்கு வேட்கை நீங்கி நில்; வேலும் மயிலும் துணையெனக் கொள்; ஆறெழுத்தைச் சொல்; தினமும் மலைவலம் செய்; மூன்று மண்டலம் அங்கிரு; பிராரத்துவ கன்மம் பின் வாங்கும். அதன்பின் பர்வதத்தின் மேலேறிப் பழநி யாண்டவனைக் காண்; பக்தி செய்!

பசு புண்ணியத்தால் படர்ந்த செல்வம், தக்க வழி நோக்கிப் பறந்தது; இனி, ஆவினன் குடியான, பழநிப் பதியான், வறுமை யகல அமைதியும் செல்வமும் அருள்வன். சத்தும் சித்துமான எங்களை வழிபடும் நீ, இன்பப் பழநியானை யிறைஞ்சிய பின் நிறைவு பெறுவை!

பளிச்சென்று கனவு அகன்றது. உடல் புளகித்தது; உள்ளம் உருகியது.

பழநியப்பா! மதிமறைத்த வினைக்கேடன் உன்னை மறந்தே இருந்தேன்! மறந்த என்னை மன்னித்திடு என்று அலறி, படுக்கை விட்டு எழுந்தார்; வாழ் பழநித் திசை நோக்கி வீழ்ந்து வணங்கினார்.

மனம் நடுங்கினள் மனையாள். என்ன செய்தி! ஏன் இப்படி உங்கள் உடல் ஆடுகின்றது என்று, கணவர் கரத்தை விசையொடு பிடித்து வினவினள்.

தேவி! யான் பழநி சென்று திரும்புகிறேன்; ஏன் எதற்கு என்று கேளாதே! இது கடவுள் கட்டளை; அவ்வளவுதான் உனக்கு அறிவிக்க உரிமை.

யானும் வருகிறேனே!

அப்படி உத்தரவாகவில்லை. என்னிடம் மேலும் எதையும் கேட்காதே; மூன்று மண்டலம் கழிந்ததும், திரும்பி வருகிறேன்;

வாதனையோ டாடும் மனப்பாம்பு மாயஒரு
போதனைதந் தையா புலப்படுத்த வேண்டாவோ

போய் வருகிறேன் என்று அப்போதே புறப்பட்டார். அதன் மேல் மறுதலிக்க அறியாத மனையாள், உன்னை நம்பிய அவர்க்கு, உனது அருளைச் செய் உமாபதி என்று விதிட்டுக் கூவினள்.

பழநியில் பயில்வு.

காதம் பல கடந்தார்: செவ்வேள் தல எல்லையைச் சேர்ந்ததும், தண்டாயுத பாணிக்கு ஹரோஹரா என்று, அவரையும் அறியாமல் வார்த்தைகள் வாயில் வந்தன.

சரவண தீர்த்தத்தில் நீராடினர். ஜபதபங்களை முடித்தார். திருவாவினன் குடியைச் சேர்ந்தார். இறைவன் திருக்கோலப் பொலிவு, அவர் உளத்தைத் தீண்டிற்று. அன்புக் கண்ணீர் பெருகியது.

பொன்னே பொற்பே புதுமதியே புனித உமையாள் தருசுதனே
என்னே உன்னை யேத்தாதே யிருந்தே னந்தோ இருள்வலியால்
கன்னேர் நெஞ்சம் கரைந்துகரைந் தின்பக் கடலுள் மூழ்க அருள்
அன்னே ஆவி நன்குடியாய் அமைதித் திருவை யருள்வாயே !

என்று பத்துப் பாடலை மனம் கசிந்து பாடினர்.

அதன்பின் மலைவலம் வந்தார். பழநியப்பா! பழநியப்பா என்று வழுத்திக் கொண்டே யிருக்கிறது வாய். இந்த வழிபாடு, பலநாள் இனிது நிகழ்ந்தது. பசி வந்தபோது, பழநி யாத்திகர் சிலர், விநயமொடு அழைத்து விருந்து வைத்தனர். சில சமயங்களில், இரண்டு மூன்று நாட்கள் பட்டினி கிடக்கவும் நேர்ந்தது.

சோதனை.

ஒருநாள் பசி மீறியது. உடல் வாடியது. எங்கு முயன்றும் உணவு கிடைக்கவில்லை. பொழுது போயது; இரவு வந்தது; கண்ணிருண்டது; காதடைக்கின்றது; உடல் தள்ளாடுகிறது; கடுவீதியில் நிற்கிறார் காவலர்

பழநியாண்டீ! ஒரு அலறல்.

தன்னை அறியத் தனிஅறிவாய் நின்றருளும்
நின்னை அறிந் தென்அறிவை நீக்கிநிற்க வேண்டாவோ

அன்பர் துயர் அறியாத அவல குணத் தானோ நீ! கவிவார் துன்பம் களையாத கபட சித்தன் தானோ நீ.

தந்தைச்சிவ னூர்கொண்டிடு தலையோர்சிறி தேனும்
சிந்தைக்கிடை கொள்ளாது திகைக்கப்புரி லோபீ!
நிந்தைப்பொலி வேசெய்பவர் நிறைவாழ்வுற வைத்தாய்!
விந்தைப்பசி யெனைநைக்க விளைத்தாயிது முறையோ?

கருணை காட்டுவான் கந்தன்; ஆவினன் குடியான் அமைதி யளிப்பான்; பழனியான் செல்வம் பாலிப்பான் என்று மதி யணிந்த மதுரையான் வாய் மலர்ந்தமை கேட்டு, மதியிலாது இங்கு வந்தேன்.

மலைமகள் மணாளனுக்கு மணிபறங்கள் தெரியும்; மற்று முள தெய்வங்கட்கு வாழ்க்கை யிடர் புரியும்; அரையில் கோவணம்; தண்டு கையில் கொண்ட முழுத் துறவியான உனக்கு, எங்கள் பசி எங்ஙனம் விளங்கும்? போய்ப் போய் உன்னைப் புகலடைந்தேன் புத்திகெட்ட நான்!

பழநி குடி கொண்டோனே! நான் வருந்தினால் தவறில்லை; நீ வாழ்ந்திரு என்று தள்ளாடுகின்றார் பாவம்.

பழநியப்பனை அர்ச்சித்து, சாந்த மனத்தோடு மலைமே லிருந்து இறங்கி வருகிறார் ஒரு வேதியர். நாவலரை யணுகினார். சிந்தைகளைக் கேட்டார்; மெல்ல நகைத்தார்.

என்ன ஐயா இது! பழநிப் பதியானை ஒரே அடியாக வெளுத்துக் கட்டுகிறீரே! பாவம் நீர் என்ன செய்வீர்! பசிக் கொடுமை அப்படி யெல்லாம் உம்மைப் பேசச் செய்கிறது. பசியை விளைவித்ததனாலேதான், உம்மிடம் இவ்வளவு பாட்டு வாங்கினான் பழநியான்!

அண்மையில் ஒரு மளிகைக் கடை; அங்கு வீற்றிருக்கும் ஆறுமுக செட்டியாரை, வந்த அந்தணர் பார்க்கிறார்.

யார் அது? ஆறுமுக செட்டியார்தானே!

ஆமாம் ஸ்வாமி! கடைவிட்டு எழுந்து வந்து, கைகுவித்து வேதியரை வணங்குகிறார் செட்டியார்.

அன்னக் குறையா அகண்டிதா னந்தமெனும்
வென்னமெனக் கையா வெளிப்படுத்த வேண்டாவோ

இதோ பாரும்; இவர் ஒரு நாவலர்; அன்புமிக்கவர்; பழனியி லிருக்கும்வரை, நாள் தவறாமல் இவர்க்கு நீர் அமுது அளிக்க வேண்டும்; அதற்காகிற செலவை நாம் ஏற்றுக் கொள்கிறோம்

அதற்கு என்ன ஸ்வாமி !

யான் பிறகு சந்திக்கிறேன் என்றுரைத்து வேதியர் சென் ருர் பழனிப் பக்தரான செட்டியார், நாவலர் உணவிற்கு விரைந்து வழி செய்தார், அன்று முதல், நாவலர்க்கு உணவுக் கவலை ஒழிந்தது.

ஒவ்வொரு நாளும் காலைக் கடன் முடித்து, நீராடி. அநுட் டானங்களை முடித்துக் கொண்டு, ஆவினன் குடியை யிறைஞ்சி, மலைவல நாவலர் மலைவலம் வரலாயினர்.

பரிசளிப்பு

மூன்று மண்டலமும் முடிந்தது.

மலைமேல் ஏறினர். பழனி யாண்டவனைச் சேவித்தார். இடையறாது அபிஷேகம் நடைபெறுகிறது; மணிக்கொருதரம் அலங்காரம் மாறி மாறி யமைகிறது. அற்புதமான சேவை. உள்ளம் பாகாய் உருகுகிறது.

என் அப்பா! பழனிப் பரமா! பிறந்த நாள் முதல் இனிய நின்கோலம் சேவிக்காமலே இருந்தேன். பழனிக்கு வந்தும், மும்மண்டலமும் கடந்து நின்னைத் தரிசிக்கும்படி முன் கூட்டி உத்தரவு பிறப்பித்தாய்! காலம் தாழ்த்து காட்சி வழங்க, பாறையோ இரும்போ உவதுள்ளம் பழனிப் பதியானே என்று, அமுத கண்ணீர் அருவியெனப் பாய பரிவு மிகுந்து பாடுகின்ருர் நாவலர்.

நன்ருயிருக்கிறது பாடல்; நாவலரே! இங்கு வாரும் என்று, யாரோ ஒருவர் பின்னிருந்து அழைப்பது கேட்டுத் திரும்பிப் பார்த்தார்.

கம்பீரமான தோற்றம். மழுங்க மொட்டையடித்த தலை. விபூதிமேனி. உருத்திராக்கத் தாழ்வடம் மினு மினு வென்று

அண்டனே அன்பர் அமுதே என் ஆருயிரே
தொண்டனேற் கின்பந் தொகுத்திரங்க வேண்டாவோ

பொன்னாய் மின்னுகிறது. வாரும் வாரும் என்று போய்க் கொண்டே யிருக்கும் அவரை, விரைந்து தொடர்ந்தார் நாவலர். யாருமற்ற தனியிடத்தில் தடைபட்டு நின்றனர் இருவரும்.

என்ன ஐயா! எதற்கு அழைத்தீர்கள்? தாங்கள் யார் என்றார் நாவலர்.

உம்மை நான் அறிவேன்! ஏசாதீர்; பழனியானை யிப்படி யெல்லாம் இகழாதீர்! அவன் உள்ளத்தை உம்மால் அறிய இயலாது. வறுமையால் வருந்திய உமதறிவு, ஒளிர்வதற்கு அயலாகி இருளடர்ந்து இருக்கிறது. அதனால்தான், ஆண்டியப் பனை அளவு கடந்து நிந்தித்தீர்! எனினும், உள்ளம் நெகிழ் விக்கும் தமிழால் உணராது வைதிராயினும், அப்பாடல் எம்மை என்னென்னவோ செய்துவிட்டது.

பாடிய நிந்தைக்கு இது ஒரு பரிசு.

இப்போது துதித்த பாடலுக்கென்று இதை வைத்துக் கொள்ளும்!

எதிர் காலத்தில் நீர் பாடும் பாடலுக்குரிய பரிசையும் இப் போதே தருகின்றோம்; பெற்றுக் கொள்ளும் என்று சொல்லிய படியே, பெரிய எலுமிச்சம் பழ அளவில் உள்ள மூன்று பொன் உருண்டைகளை, நாவலர் கையில் நல்கினார்.

அதன் பின், எமக்கு இன்னம் பல செயலுளது: மறவாதீர்! வருகிறேன் என்று கூறி கோயில் நோக்கி விரைந்தார்.

நாவலர்க்கு ஒன்றும் தோன்றவில்லை. எல்லாம் திக்பிரமை யாக இருந்தது. சிறிது நேரத்தில் சமாளித்தார். கையில் இருந்த பொன் உருண்டைகள் மூன்றும், பார்த்து அவரைப் பரிகசிப்பன போல் ஒளிவிடுகின்றன,

உடனே, உருண்டை தந்தவர் சென்ற திசை நோக்கி ஓடி னார். அவர் அகப்பட்டால்தானே! மாயமாய் மறைந்த அவரை நினைத்து, வெளர்ந்த நெஞ்சம் கிளுகிளுத்தது. அதே சமயத்தில், மூலத்தானத்துள் நுழைகிறது அவ்வுருவம்; அடுத்து காணப் பட வில்லை.

பாராதே நின்று மைநயாதே சும்மாதான்
வாரா யெனவும் வழிகாட்ட வேண்டாவோ

அலறினார் நாவலர். பழனியப்பா! நான் பாவி. இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல், வலிந்தழைத்துச் சென்றாய்: செயலற்றுத் தொடர்ந்தேன். முக்காலப் பரிசென்று மூவுருண்டை தந்தாய்; ஏழை யடியார்கள் சொன்ன யாவும் மகிழ் இறைவா! தியாகங்க சிலமுள உன்னருமை அறியாது, அவமதித்த என்னை மன்னித்தல் செய்வாயோ மயிலேறும பரமா!

கல்லாலடி கம்பாலடி காலாலுதை கனமார்
வில்லாலடி தந்தார்க்கருள் விளைவித்தவன் குமரா!
சொல்லாலடி யெற்கன்பு சுரந்தாண்டனை வாழி
பல்லார்புகழ் ஞானோதய பழனிப்பதி யானே!

[கல்லா லடித்தவர் - சாக்கியர்; கம்பா லடித்தவர் - பாண்டியர்; காலா லுதைத்தவர் - கண்ணப்பர்; வில்லா லடித்தவன் - அர்ஜுனன்].

கல்லடி கம்படி வில்லடியிலும், சொல்லா லடிப்பது பெரும் பாவம். நிந்தையே பெரிது புரிந்த எனக்கும் அருள் புரிந்த உனது கருணையை, என்னென்று பேசுவேன் இறைவனோ என்று நயந்து பாடி அழுகிறார் நாவலர்.

இரவு 11-மணிக்கு மேல் அடிவாரம் வந்தார். அன்றைய இரவு முழுதும் பழநியான் அருள் நினைந்து நெகிழ்ந்தார். வைகறையில் கண்ணுறக்கம் வந்தது.

குடும்பம் எதிர் பார்க்கிறது; உனது வருகையைப் புலவர்கள் உலகம் ஒவ்வொரு நாளும் எதிர் நோக்கி யுளது; மதுரைக்குப் புறப்படு என்று கனவில் பிறந்தது கட்டளை. உடனே கண் விழித்தார். பழநியை எப்படி அகலவதென்று, பதைத்தது மனம்.

கட்டளையை மீறலாமா? வேறு விதியில்லை. மலையை வலம் வந்தார். தாயை நீங்கும் கன்றுபோல், பதைத்த மனத்தொடு பழனியை விட்டுப் புறப்பட்டார் மதுரை சேர்ந்தார். மகிழ்ந்தது குடும்பம்: வறுமை யகன்று பல காலம் வாழ்ந்தார். கற்றவர்க்கும் வாழ்வு தந்தார். பாணர்க்கும் தருமிக்கும், சீட்டுக் கவி

கல்லாத நெஞ்சங் கரைந்துருக எத்தொழிற்கும்
வல்லாய் நின் இன்பம் வழங்கிலுன் ஆகாதோ.

பாடி யளித்து நிதி யுதவிய மதுரை விமலன், பழனிப் பதியா னிடம் செல் என்ற வாய்ச் சொல்லால், எனக்கு வாழ்வு தந்தான் என்று வாழ்த்தியபடியே யிருந்தார். ஆண்டுகள் சில அகன்றன.

தாயை நினைவு கொண்ட கன்றுபோல், பின்னொரு சமயம் பழனிக்கே வந்தார். கற்றவர், அருள் ஞானம் பெற்றவர், தொண்டர் பலர் வந்து எதிர் கொண்டனர்.

முதலில் எதிர்கொண்டவர், அன்று உணவளித்த ஆறுமுகம் செட்டியார். நாவலர் பெரும! வணக்கம்! பழனியான் கருணைக் குப் பாத்திரமானவர் நீர்; மதுரைக்குச் சென்றபின், உம்மை எங்கும் தேடினேன்; கிடைக்கவில்லை. என்ன செய்வது என்ற கவலையோடு படுத்தேன்; எம் அத்தன் பழனியான் என் கனவில் வந்தான்.

நாவலன் என் அன்பன். அவனுக்கு அன்ன மளிக்கும்படி உன்னைத் தூண்ட, வேதியர் உருவில் வந்தது யாம்; நாவலனை மதுரைக்கு அனுப்பியுளன்; மற்றும் ஒரு சமயம் வருவன்; அவனது அன்றைய வருகையையும் அறிவிக்கிறேன்காண் என்றான் எம்பெருமான். கண் விழித்து வியந்தேன்,

அதனுடன், நேற்றிரவும் என் கனவில் எங்கள் பிரான் வந்தான். உமது வருகையையும் உணர்த்தினான். நாங்களாம் இரண்டு தடவை எம்பிரானைச் சேவித்தேன். வருக ஐயா வருக என்று அழைத் துச் சென்று, தம் மாளிகையில் நாவலரைத் தங்க வைத்தார்.

ஒவ்வொரு நாளும் இனிய உபசாரம் செய்தார்; அவர் மாளிகையில் இருப்பு; மற்ற நேரமெல்லாம் மலைவலம் வருதல்; பழனிப்பதிகம், பழநியந்தாதி, பழனிக் கலம்பகம் முதலிய பல பிரபந்தம் பாடி யரங்கேற்றல்; இப்படி யிருந்தது நாவலர்தம் பொழுது போக்கு.

பலகாலமாகப் பாடல் அர்ச்சனையைப் பழனியானுக்குச் செய்துவரும் பரம பக்தர் நாவலர் என்ற பாராட்டுரை, எங்கும் இனிது பெருகியது.

என்னை அறிய எனக்கறிவாய் நின்றருளின்
தன்னை அறிந் தின்பநலஞ் சாரவைத்தால் ஆகாதோ

சாந்தி

ஐந்தொழில் கூத்து இயற்றி, உலகைக் கூடவைத்து நீட வைத்து குலையப்புரி குமரேசா! சிந்தைக்கும் நிதியளித்த விமலா! பிறவிக் கோடை தீர, என்னை உனது அடி நிழலில் வை என்று பிரார்த்தித்தார் பலகாலம்.

அதற்குரிய அருளை அமலன் அருளும் காலம் வந்தது.

ஒருநாள் காலை வழிபாடு நிகழ்ந்தது; இறுதியில், வேண்டுவார் வேண்டுவதே யீவானாகிய விமலனை, பழநியப்பா! பழம் - நீயப்பா! நீ - அப்பா! நீ...... நான், அ......ப்......பா என்று மெல்லெனப் பகர்ந்தபடியே, நாவலர் ஆன்மா நம்பன் தாள் மலரை நண்ணியது.

வளஞ் சிறந்த நம் மதுரை நாவலர் வரலாற்றை, இன்றும் பாடித் தமிழகம், கனிந்த இன்பம் காண்கிறது.

என்ன புண்ணியம்

தி. சு. மறைமலையார்

(116-ம் பக்கம் தொடர்ச்சி)

நீர் என்ன புண்ணியஞ் செய்தீர்? நாம் என்ன புண்ணியஞ் செய்தோம் என்று கேட்டால் வரும் விடையைக் கவனிப்போம்.

இவ்வுலகத்தில் என்ன புண்ணியஞ் செய்யவேண்டியிருக்கிறது? புண்ணியஞ் செய்தவர்கள் செய்கின்றவர்கள் நாசமடைவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். மோசஞ் செய்தவர்கள், செய்கின்றவர்கள் சிறந்த செல்வர்களாய்ப் பல்லோரும் மதிக்கத் தகுந்த முறையில் வாழ்வதைக்

பொய்ம்மையமே யான புரைதீர எந்தை இன்ப
மெய்ம்மையம் வந்தென்னை விழுங்கவைத்தால் ஆகாதோ

காண்கின்றோம். ஆகவே, எதையும் கவனியாமல் செல்வத்தைத் தேடி உலகில் சிறக்க வாழ்வதே சிறப்பாகும் என்கின்றனர்.

செல்வத்திலே திளைத்திருக்கும் சீமாட்டியாரை ஒருகால் கண்டு, நோய்வாய்ப் பட்ட ஒருவருக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டது. அப்போது அவ்வம்மையார், 'நான் நிரம்ப தான தருமங்கள் செய்து, போதியபடி புண்ணியத்தைத் தேடியாயிற்று. இனித் தேடவேண்டிய புண்ணியம் அல்லது செய்யவேண்டிய தான தருமங்கள் ஒன்றுமில்லை. ஆகவே, நான் செய்ய வேண்டுவது ஒன்றுமில்லை; இனிச் செய்யப் போவதும் கிடையாது' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார்கள்.

இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்த நோயாளி, 'அப்படியா அம்மா! நான் உதவி வேண்டி வந்தேன்; அதனைக் கேட்ட தங்கள் மனத்தைப் புண்படுத்தி விட்டேன்; அடியேனை மன்னிக்க வேண்டும். நான் போகின்றேன்' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

அவர் போகும்போது அச்சீமாட்டியாரைப் பற்றி என்ன நினைத்துச் சென்றிருப்பார் என்று சிறிது எண்ணிப் பார்ப்போம். 'இவ்வம்மையார், தாம் அடைந்துள்ள செல்வத்தைப் பிறக்கும்போதே கொண்டு வந்தார்களா? அல்லது இறக்கும்போது கொண்டு போகப் போகின்றார்களா? இடையிலே நல்வழியாற் கிடைத்த இச்செல்வத்தை நல்வழியில் மக்கட்குப் பயன்படுத்தி அவர்கள் இனிய முகத்தைக் கண்டு மகிழாமற் போகின்றார்களே! இனிப் புண்ணியஞ் செய்ய வேண்டுவதில்லை என்று கூறுகின்றார்களே!

அத்தா நின் பொற்கு அடிக்கே அநுதினமும்
பித்தாக்கி இன்பம் பெருகவைத்தால் ஆகாதோ.

சிறந்த அடியார்களெல்லாம் இறைவன் திருவடிப் பேற்றைக் காணும் வரையில், அடையும் வரையில் தன் குறிக்கோளை நிறைவேற்ற வில்லையா! ஆ! இவ்வம்மையாரின் அறியாமைக்கு வருந்தாமலிருக்க முடியவில்லையே! ஆண்டவனே! அம்மையார் அவர்கட்குப் பேழையிற் செல்வத்தைப் போட்டுப் பூட்டி வையாமல், அரனடியார்கட்குப் புகழ் காரணமாகச் செய்யாமல், பூரணன் இன்பப் பேற்றுக்காகச் செலவு செய்ய நன் மனத்தை யருளல்வேண்டும்' என்றன்றோ சிந்தித்துச் செல்வார்? இது கிடக்க,

அந்நோயாளி சிந்தித்தார். தெளிந்தார். அவர்க்குத் தேவாரத்திலிருந்து ஓரடி நினைவிற்கு வந்தது. அவ்வடியாவது,

'பாடுவார் பசி தீர்ப்பாய், பரவுவார் பிணிகளைவாய்' என்பது. தனக்குத் தெரிந்த தேவார திருவாசகங்களைப் பாடிக்கொண்டும், இறைவனைப் பரவிக் கொண்டிருந்தார். அவர்க்கு ஒருநாள் மற்றோர் அம்மையாரைப் போய்ப் பார்க்கலாம் என்னும் நினைவு உண்டாயிற்று. இறைவனை வணங்கினார். பாடினார். விரைந்து தம் நோயையும் பொருட் படுத்தாமல் சென்றார். தேடிச் சென்ற அம்மையார் சிவப் பொலிவோடு திகழ்ந்தார்; வணக்கஞ் சொன்னார். வந்த நோயாளியை ஏற இறங்கப் பார்த்தார். களைப்புற் றிருப்பதை அம்மையார் அறிந்தார். தம் வேலைக்காரரில் ஒருவரை யழைத்துச் சிற்றுண்டியும் தேனீரும் கொண்டு வந்து கொடுக்கும்படிக் கட்டளையிட்டார். அவ்வேலையாள் அரிய தட்டொன்றில் கொஞ்சம் இட்டலியும், சுவை நிரம்பிய துவையலும், பருகுதற்கு வெந்நீரும், பின்

சோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே
ஆதியே நின்னை அறியவைத்தால் ஆகாதோ

தேனீரும் கொண்டு வந்து கொடுக்க, அவற்றை அம்மையார் அவர்கள் தம் திருக்கரங்களால் வாங்கி, நோயாளிக்குத் தாமே கொடுத்துச் சாப்பிடும்படி வேண்டிக் கொண்டார்.

அம்மையார் அவர்களால் மிக்க அன்புடன் கொடுக்கப்பட்ட அவ்வுணவைப் பணிவுடன் வாங்கி யுண்டார். சுவையோ மிகுந்து காணப்பட்டது. தேனீர் வாங்கிப் பருகினர். இன்னுஞ் சிறிதுணவு சாப்பிடலாமே என்றார் அம்மையார். அதற்கு அந்நோயாளி, 'தாயே! என் வயிறார உண்டதுமட்டு மல்லாமல் மனமார இன்பத் தோடுண்டேன். என்பசியறிந்து உணவு படைத்த தங்கட்கு அடியேன் யாது கைம்மாறு செய்யப் போகின்றேன்?' என்று மலர்ந்த முகத்தோடு இனிய சொல்லால் கூறினர்.

இவ்வளவையும் கூர்ந்து கவனித்த அம்மையார், உண்மையைப் பேசுகின்றார் என்பதையும், வயிறார, மனமார உண்டார் என்பதையும், மலர்ந்த முகத்தையுங் கண்டு உள்ளம் பூரித்தார். 'ஆண்டவனே! என்னிடம் கொடுக்கப்பட்ட செல்வம் அடியார்களுக்குப் பயன்படுத்தத் தகுந்த உள்ளத்தைக் கொடுத்தருள வேண்டுகின்றேன்' என்று இறைவனை மனத்தே பரவினர்.

பின், ''தம்பி! உனக்கு உடம்புக்கு என்ன? ஏன் இளைத்துக் காணப்படுகின்றாய்? உன்னால் ஏதேனும் தொழில் செய்ய முடிகின்றதா? வீட்டில் எத்தனைபேர் இருக்கின்றீர்கள்? என்று கேள்வி மேல் கேள்வி அடுக்கிக் கொண்டே போனர்.

நேசஞ் சிறிது மிலேன் நின்மலனே நின்னடிக்கே
வாசஞ் செயஇரங்கி வாவென்றல் ஆகாதோ

கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த விடை கொடுத்தார் கோயாளி.

விடைகளைக் கேட்ட அம்மையார் அவர்கள், அவர் தம் நோய் நீங்க இறைவனை வேண்டினர். எழுந்து உள்ளே சென்றார். தம் பெட்டியிலிருந்து கொஞ்சம் ரூபாய் எடுத்துக் கொண்டார். அழகாகப் பின்னப்பட்ட ஓர் ஓலைப் பெட்டியுடன் வெளியே வந்தார். 'தம்பி! இப் பெட்டியில் கதிர்காமத்தில் உறைகின்ற கந்தப் பெருமான் திருநீறும் குங்குமமும் இருக்கின்றன. இந்தப் பெட்டி கதிர்காமத்தில் வாங்கப்பட்டது. நாடோறும் சிறிது திருநீறு எடுத்து நீரில் இட்டு நோய் நீங்க வேண்டுமென்று காலையில், மாலையில் பருகினல் நோய் நீங்கும். குங்குமத்தையும் இட்டுக் கொள்ளவும். இறைவன் நினைத்தால் ஆகாத காரியம் உண்டோ! ஆகவே, முருகனை நம்பி எதையும் செய், நலம் பெறுவாய் என்று வாழ்த்தினர். அதன் பின், தன் கையிலிருந்த பத்து வராகனையும் கோயாளியின் கையிற் கொடுத்து, இதனை வீட்டுச் செலவுக்காக வைத்துக் கொள். பாலும் பழமும் வாங்கிச் சாப்பிடு. வழிச் செலவுக்காக இந்த ஒரு ரூபாயைத் தனியாக வைத்துக்கொள்' என்று கொடுத்தார்கள்.

கோயாளி பார்த்தார்! இதுவன்றோ தாய் உள்ளம். 'பெற்ற தாயினும் ஆயின செய்யும்' என்று சான்றோர்கள் கூறியிருப்பது போல, எதையும் கேளாததற்கு முன்பே அருள் உள்ளத்தோடு வழங்கிய அம்மையார் அவர்களின் அன்பு பெரிது! பெரிது!! இறைவன் கருணை

என்னறிவுக் குள்ளே இருந்ததுபோல் ஐயாவே
நின்னறிவுள் நின்னுடன்யான் நிற்கவைத்தால் ஆகாதோ

இருந்தவாறு என்னே! என்னே!!' என்று ஆனந்தக் கண்ணீர் பொழிந்தார்.

"தம்பி! நீ சிந்திப்பன எல்லாம் தெரிகின்றது. எனக்குக் கிடைத்த பொருள் எனக்குச் சொந்தமாகுமா! அடியார்களுக்குப் பணி செய்யவே, மக்களுக்குத் தேவையானவைகளைச் செய்யவே, இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்னால் இயன்றதைச் செய்கின்றேன். மக்கட்குச் செய்பணியானது இறைபணியாகும். இதனாலன்றோ தாயுமானவருங்கூட,

'அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே'

என்று கூறியருளுவா ராயினர். ஆளுடைய அரசுங்கூட,

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே'

என்று அருளிச் செய்திருக்கின்றனர். ஆதலால், என் கடமையைச் செய்கின்றேன். தம்பி! இதைத் தவிர வேறு என்ன வேலை இருக்கின்றது?' என்று கூறிமுடித்தார்.

நோயாளி, அம்மையார் அவர்களிடம் விடைபெற்றுப் பிரிய முடியாமற் பிரிந்து சென்றார். செல்லும்போது, அம்மையார் அவர்களை மனமார வாழ்த்தினர். 'ஆ! அம்மையார் அவர்கள் செய் புண்ணியமே புண்ணியம்!' என்று புகழ்ந்து கொண்டே வீடு சேர்ந்து, அவர்கள் கூறியபடி திருநீற்றால் நோய் நீங்கப் பெற்று, பசிப் பிணியும் தீர்ந்து நலமே வாழ்கின்றார்.

ஆசைச் சுழற்கடலில் ஆழாமல் ஐயாநின்
நேசப் புணைத்தாள் நிறுத்தினால் ஆகாதோ

என்றும் அம்மையார் நீடுவாழ இறைவனை நாம் யாவருமே வணங்குவோமாக.

இவ்வம்மையார் முருகனை இடையறாது வணங்குகின்றவர்கள். அடியார்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும், நோயாளர்க்குத் திருநீறும் தந்து உதவுகின்றவர்கள். வலக்கையால் செய் தருமம் இடக்கை யறியாதபடி செய்கின்றவர்கள். உண்மை யடியவர்களை அறியுந் திறனுடையவர்கள். செல்வச் சீமாட்டியார், சீரிய ஒழுக்கமுடையவர்கள். புலவர்களைப் போற்றும் பொற்புடையவர்கள். இத்தகைய அம்மையார் சென்னைப் புரசையில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் திருவடிகளுக்கு வணக்கஞ் செய்கின்றேன்; செய்வோமாக.

'ஏ! நெஞ்சமே! என்ன புண்ணியஞ் செய்தனை! இறைவனை வாயாரப் பாடும் புண்ணியத்தா லல்லவோ என்பசி தீர்ந்தது; அவனைப் பரவும் புண்ணியத்தா லல்லவோ பிணியுந் திருநீற்றால் தீர்ந்தது. என்ன புண்ணியம் இது' என்று நோய் நீங்கப் பெற்றவர் மனம் பூரிக்கின்றார். புண்ணியமே புண்ணியம்! வாழ்க.

திருமுறை இன்னிசை உணர்ச்சிப் பெருவிழா

திருக்கழுக்குன்றத்தில் இந்த ஆண்டில் (26, 27, 28, 29-6-52) தெய்வ உணர்ச்சி மிக்க பேரன்பர்கள், நாட்டின் நாலா பக்கங்களிலும் இருந்து, வெள்ளம்போலத் திரண்டு

ஓயாவுள் என்பாய் உருகிவாய் விட்டரற்றிச்
சேயாகி எந்தை நின்னைச் சேரவைத்தால் ஆகாதோ.

கூடிப் பேரமைதியில் இன்புற்றிருந்தார்கள். உலகியலைத் தூய்மை செய்யும் நுண்ணிய உணர்ச்சி நிலை, நான்கு நாட்களிலும் அங்கே பெருக்கெடுத்து ஓங்கியது! மனிதர்கள் மனிதர்களாகவும், அம் மனித நிலையினும் மேம்பட்டவர்களாகவும் உயர்ந்து மிளிர்ந்தனர்!

உலக வாழ்க்கையில், கீழ்நிலை உணர்ச்சிகளும் மேல்நிலை உணர்ச்சிகளுமாகப் பல படிகளில் மக்களுணர்ச்சிகள் உள்ளன. கீழ்நிலை உணர்ச்சிகளை மறந்து மேல்நிலை உணர்ச்சிகளில், நினைவு சொற் செயல்கள் விளங்குவதற்கு உலகத்தில் வாய்ப்புகள் வேண்டும். திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்ற வழிபாட்டுப் பெருவிழா, அந்த வாய்ப்பைத் தகுதியாகத் தந்தது! ஆண்டுதோறும் தந்து வருகின்றது.

ஆனி மகத்தில் மாணிக்கவாசகர் திருநாளில் இப் பெருவிழாப் பயனைச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார், நாட்டுக்கு ஆண்டுதோறும் வழங்கி வருகின்றனர்.

கழுக்குன்றத்து உணர்ச்சியில் விளங்கும் தெய்வத் தாமரையின் பேரின்பத் தேனை ஒவ்வோர் ஆண்டிலும் பல்லாயிரக் கணக்கில், திருமுறை இன்னிசைத் தேனீக்களாகிய அன்பர் பெருமக்கள் அங்கே மொய்த்துத் திரண்டு திரண்டு, மேல்நிலை உணர்ச்சிச் சுவையை ஆரத் துய்த்து வருகின்றனர். கண்ணுக்கும் கருத்துக்கும் அவ்விழா பெரிய விருந்து!

திருக்கழுக்குன்றம், இந்தியா முழுமையும் அறிந்த, வெளி நாடுகளும் ஓரளவு அறிந்த அழகிய அருள்வண்ணத்

ஆதியாம் வாழ்வாய் அகண்டிதமாய் நின்ற பரஞ்
சோதி நீ என்னைத் தொழும்ப னென்றால் ஆகாதோ

திருப்பதி! ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த மணிவாசகப் பெருமானது திருவாசகப் பாடலையும் அருட்பதிவாக அது பெற்றுள்ளது.

துதிப் பாடலாகவும், இசைப் பாடலாகவும், அகச் சான்றுப் பாடலாகவும் மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகத்துக்கு முன், அதனை ஒத்து அல்லது அதற்கு மேற்பட்ட அருட்பாடல் எது உள்ளது என்று தெரியவில்லை. அவ்வளவு பழமையான அருமையான ஞானப் பெரியோரின் அமிழ்தப் பாடலையும் அருட்பதிவையும் பெற்றுத் திகழ்வது திருக்கழுக்குன்றம்! மேலும், மணிவாசகரின் கடைசி 'அனுபவ நிலையில் எழுந்த, அருட்கோலத் திருவடிப் பாடலையே திருக்கழுக்குன்றம் பெற்றுள்ளது!

புனிதமான இத்தகைய பெரிய தலத்திலேதான் அடியார்கள் பல்லாயிரக் கணக்காக ஆண்டுதோறும் ஆனி மகத்தில் திரண்டு திரண்டு திருமுறை இன்னிசைப் பெருவிழா நிகழ்த்துகின்றனர்.

தமிழகத்தில் மலைப் பகுதிகள்தோறும் திருப்படி விழா என்னும் இசை முழக்கப் பெரு விழாவை, ஒரு புதிய முறையில் தொடங்கி நடத்தித் தெய்வ உணர்வை இன்னிசை விரிவுரைத் தேனிற் கலந்து கனிவுடன் ஊட்டி வருகின்ற திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களும், சமயப் பாதிரியார் எனப் புகழ்பெற்றுச் சமய உணர்ச்சிகளையும் இயக்கங்களையும் தலை நிமிரச் செய்து பலரும் வியக்கும்படி அருள் தொண்டாற்றி வரும் தவத் தலைவர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும்,

---

கண்ணாடி போல எல்லாங் காட்டுந் திருவருளை
உன்னாடி ஐயா உருக வைத்தால் ஆகாதோ

விரிவுரைச் செஞ்ஞாயிறு எனத் தமிழகம் முழுதும் ஓயாது உலாவிச் செஞ்சொற் பேரொளி சிந்தித் தெய்வ உணர்வைச் செழிக்கச் செய்து வருகின்ற திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்களும், செம்மனத் திருமுறைக் காதலும், திருமுறை இன்னிசை யோகமும், உருக்கமும் விரிவுரைத் தொண்டும் பயின்று பண்டைச் சைவத் தலைவியரை நினைவூட்டிக்கொண்டு இஞ்ஞான்று திகழும் திருமயிலைக் காஞ்சனமாலை அம்மையார் அவர்களும் போன்ற பத்தித் தலைவர்கள், ஆண்டுதோறும் திருக்கழுக்குன்றத் திருமுறைப் பெரு விழாவில் முன்னின்று கலந்து, பேருணர்ச்சியை ஆர்வமாய் ஊட்டி வருகின்றனர்.

கலைவல்லோர் இசைவல்லோர் சான்றோர் தொண்டர் முதலிய பலர் ஊக்கத்துடன் கலந்துகொண்டு, தத்தம்மால் இயன்ற அறிவுத் தொண்டுகளை ஆற்றி வருகின்றனர்.

தாய்மார் ஊக்கம் மலைபோலப் பெருகி வருகின்றது; பல ஆயிரக் கணக்கில் அவர்கள் கடல்போலத் திரண்டு பெருகுகின்றனர். இனிய மழை மேகக் குமுறலைப் போல் இன்னிசை மிழற்றுகின்றனர்; விரிவுரை நிகழ்த்துகின்றனர். பேராறு போல அவர்கள் பக்திப் பெருவெள்ளம் கரை புரளப் பெருக்கெடுத்துப் பாய்ந்து, சிவானந்தப் பயிரை விளைத்து வருகின்றது.

வேத மலையாகிய திருக்கழுக்குன்றில் புதியவாகவும் அழகாகவும் திருப்படிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. உச்சிக் கோவிலுக்கு அலை மாலை போல அமைந்துள்ளன. திருப்புகழ்மணி அவர்கள், ஆண்டவன் திருநாமங்களையும் இன்னிசைக் கீதங்களையும் தம்மை மறந்த பேருணர்வு

---

* மூலஇருள் கால்வாங்க முதறிவு தோன்ற அருள்
கோலம்வெளி யாக எந்தை கூட்டுவித்தால் ஆகாதோ

நிலையில் படிதோறும் அடிவைத்துப் பாடிக் கொண்டு அன்பர் திரளுடன் மேலே ஏறிச் செல்லும்போது அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாய் இருக்கின்றது! கீழே அடிவாரத்திலிருந்து மேலே உச்சிமலை வரையில் ஒரே அன்பர் திரள் படியூடு செறிந்திருக்கின்றது! ஆண்டவனுக்குத் திருப்படிகள் ஒரு மாலை போல் விளங்குகின்றனவென்றால், அப் படிகளில் பரவசமாய் உருகி நிற்கும் அன்பர் திரளும் அம் மலைக்கு ஒரு மாலை போல் பெருங் காட்சி அளிக்கின்றது. உச்சி வரையில் கேட்கும்படி ஒலிப்பெருக்கி உண்டு! மலையெல்லாம் விமானில் இன்னிசை மயம்! அருளுணர்ச்சி மயம்! பல்லாயிரக் கணக்கான நன்மக்களை அருள்வெள்ளத்தில் தேக்கி வரும் திருப்புகழ்மணி யவர்களின் தெய்வீகத் தொண்டை யாரும் மறக்க முடியாது. நுட்பமான கருத்துக்களை இடையிடையே விளக்கிக்கொண்டு, கீத மழை பொழிவது அவர்கள் வழக்கம். அனைவரையும் ஒன்றுபடுத்தும் ஆற்றல் அவர்களிடம் அமைந்துள்ளது. உச்சிக் கோயிலின் அருகில், திருப்படி சென்று முடியும் இடத்தில், திருக்கோயில் வாயிலைத் திருப்புகழ்மணி அவர்கள் திறந்து வைத்தார்கள்!

திருக்கழுக் குன்றத்தின் அடிவாரம் (மலை ஏறும் வாயில் இடம்) ஐயாயிரம் மக்களுக்குக் குறையாமல் அடங்கக்கூடிய ஒரு மேடைபோலப் பரவலாய் உயர்ந்து அமைந்திருக்கின்றது. திரு. வாரியார் முதலியோர் அரிய பெரிய விரிவுரைகள் நிகழ்த்தும்போது அந்த மேடை முழுவதும், அதன் எதிரில் ஆறுபோல் நீண்டு கிடக்கும்

கையுங் குவித்திரண்டு கண்ணருவி பெய்யஅருள்
ஐயநின்தாள் கீழே அடிமைநின்றால் ஆகாதோ

தெரு முழுவதும், மதிற்சுவர், மண்டபத்தளம், மரக்கிளை, சத்திரத் திண்ணைகள் முதலியவற்றில் இயன்ற இயன்ற இடம் முழுவதும் மக்கள் திரள் நிரம்பி வழிந்திருந்தது. செஞ்சொல் விரிவுரைகளிலும், திருமுறை அருட் கருத்துகளிலும் மக்களுக்கு இருக்கும் ஆர்வம், முயற்சி உணர்ச்சிகளுக்கு விழா ஓர் எடுத்துக் காட்டாய் இருந்தது !

யானையின் மேல் ஏற்றிய திருமுறைகள் மலையை வலமாக வரும்போது, பல ஊர்களிலிருந்து திருமுறைக் கோட்டிகள் அணி அணியாக வலம் வந்து இசை முழக்கம் பெருகின. ஒன்றரைக்கல் தூரம் திருமுறை இசை கோட்டித் திரள் மலைவலத்தில் தேங்கி நின்றது.

சஞ்சீவி மலைச் சாரலில் அனைவரும் பரந்து அமர்ந்து, திருமுறைப் பேரவையும் நடத்தினர். காலையில் தொடங்கிய மலைவலம் மாலையில் நிறைவுற்றது.

வள்ளன்மை வாய்ந்த வண்ணை வள்ளியம்மையார், விழா நாட்கள் முழுதும் உணவளித்ததோடு, மலைவலத்தின் இடையிலேயே அத்தனை ஆயிரம் பேர்கட்கும் அன்றைப் பகலுணவும் அளித்தனர்.

தாழக் கோயில் வழிபாடு, அம்மன் திருக்கோலக் காட்சி, திருமுறை இன்னிசைக் கச்சேரிகள், திருவடி வழிபாடு, திருக்கழுக்குன்றத் திருப்பதிக விளக்கம், மெய்ம்மை நால்வர் வழிபாடு, மணிவாசகர் ஊசல், உச்சிக் கோவில் வழிபாடு, சமய வளர்ச்சி மாநாடு, வழிபாட்டுக் கூட்டவை அமைப்பு, குருகுலப் பணித்திட்ட வெளியீடு, தனிப் பெருஞ் சொற்பொழிவுகள், தியானம் முதலிய பல்வேறு அருட் சிறப்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நிகழ்ந்து, விழா

சிந்திக்குந் தோறுந் தெவிட்டா அமுதேஎன்
புந்திக்குள் நீதான் பொருந்திடவுங் காண்பேனோ

நாட்கள் முழுதும் புலனுக்கும் மனதுக்கும் அறிவுக்கும் உணர்வுக்கும் இடையறாப் பெரு விருந்துகள் அளித்து வந்தன.

நாட்டின் அருள் உணர்ச்சிக்கு நடு இடமாகிய திருக்கழுக்குன்றத்தில், அறிவார்ந்த முறையில் இனிது நிகழும் இவ்வுணர்ச்சிப் பெரு விழாவில், தெய்வீக உணர்வு நாலா பக்கங்களிலும் விம்மிப் பொங்கிப் பரவி வருதலை உலகம் வர வர நன்கு உணர்ந்து ஈடுபட்டு வருகின்றது! வாழி, திருக்கழுக்குன்றத் திருமுறை இன்னிசை உணர்ச்சிப் பெரு விழா !!

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

வி. எஸ். வேங்கடராமன்

24 - ஆம் பை

(95-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(பிரலம்பவதம்)

கோகுலத்தில் கண்ணபிரான் தன் தோழரோடு, வில்வக் காய்களைப் பந்தாக வைத்து ஹாகி போலத் தடியால் அடித்தும், பம்பளிமாஸ் பழங்களைப் பந்தாக வைத்து கால்பந்தாடியும், நெல்லிக் காய்களைக் கோலிகளாக வைத்துக் கோலி விளையாடியும், ஒருவருந் தன்னைத் தொடாதவிதம் ஓடியும், கண்ணு மூச்சி விளையாடியும், ஊஞ்சலாடியும், (ஊஞ்சல் காட்டுக்கொடிகளால் செய்தது) தான் ராஜாவாகவும், பரிவாரம் அரசாங்கமாகவும் இருந்து அரச விளையாட்டு அயர்ந்தும் தோழரைச் சிரிக்க வைத்தார்.

அழுத கண்ணீரில் நஞ்சும் உண்டு

பலராம கிருஷ்ணர் விளையாட்டில் கலந்து கொள்ள வெகு விருப்பங்கொண்ட இடைப்பையனைப் போல் தன்னையுஞ் சேர்த்

தேவலத்தில் நான் கிடந்து கீழ்ப்பட்ட தின்பஅருள்
காவலன்பால் ஒன்றிக் கலந்திடவுங் காண்பேனோ

அக் கொள்ளப் பாசாங்கு காட்டினன் பிரலம்பன் என்ற அசுரன். பலராமகிருஷ்ணர் அவனது கபடத்தை அறிந்தே, தாம் அவனை யும் சேர்த்துக் கொண்டனர். அசுரர்களை மயக்குவதும் ஆண்டவன் வேலையல்லவோ. விளையாட்டுத் தொடங்கப் பெற்றது. ராமகிருஷ் ணரே தலைவர். பலராமர் ஒரு கக்ஷிக்குத் தலைவர், கண்ணபிரான் ஓர் அணிக்குத் தலைவர். பலரும் விருப்பம்போல இரு கக்ஷிகளிலும் கணக்காகச் சேர்ந்தனர். விளையாட்டில், தோற்றவன் சுமக்க வேண்டும், வென்றவன் குதிரை ஏற வேண்டும். அவர்கள் விளை யாடின இடம், பாண்டீரகம் என்ற ஆலமரத்தின் அடி. நம் கிராமங் களில் ஆலமரமும், குளமும் கோவிலும் என்ற மூன்றும் சேர்ந்த இடம் போல இருப்பது தான் அது.

ஒரு சமயத்தில், பலராம—ஸ்ரீதாம,—விருஷபர் ஜயித்த போது, பகவான் கண்ணன் ஸ்ரீதாமனைச் சுமந்தார். பத்ர சேனன் விருஷபனைச் சுமந்தான். பிரலம்பன் பலராமனைச் சுமந்தான். அசுரனல்லவா பிரலம்பன். பலராமனை இறக்கவேண்டிய— குறிப்பிட்ட இடத்துக்கு அப்பாலே வெகு தூரத்தில் இறக்க, பிரலம்பன் வெகு வேகமாகத் தோள்களில் வைத்த வண்ணமே குடு குடுவெனச் சுமந்து ஓடினன்.

ஆதிசேடன் பலராமன் என்று அவனுக்குத் தெரியுமா?

நாலு பக்கமும், கடல் சூழ்ந்த ஏழு பெருந் தீவுகளையுடைய காணிலமாம் இப்பூமியைத் தன் ஆயிரந் தலைகளுள் ஒரு தலையால் இலேசாகத் தாங்கும் ஆதிசேடனை பலராமன், அசுரன் செயலைக் கவனித்தார். தனியிடம் என்பதை உணர்ந்தார். அசுரனுக்கு ஆட்டம் கண்டுவிட்டது. ஓடமுடியவில்லை. அசுரன் பறக்க ஆரம்பித்தான். நெருப்புக் கண்ணும், தந்திப் பல்லும், செப்புக் கம்பி முடியும், கிரீட குண்டலாங்கதங்களுடன் கூடிய மலை போன்ற மேனியுங் கொண்டவனகக் காட்சி அளித்தான் அந்தப் பிரலம்பன்.

பிரலம்பன் தலை கிட்டு

பலராமர் அவன் தோளில் அமர்ந்துகொண்டே சட்டென்று பிரலம்பன் தலையில் மட்டென ஒரு குட்டுக் குட்டினர். அவன்

தூங்காமல் தூங்கிச் சுகப்பெருமான் நின்நிறைவில்
நீங்காமல் நிற்கும் நிலைபெறவுங்-காண்பேனே

தலை பிட்டுப் போல உதிர்ந்தது. ஆ என்று கத்திக் கொண்டே அசுரன் ஆவி நீத்தான். எல்லோரும் ஓடி வந்து, பலராமா! நீ செத்துப் பிழைத்தாயடா! எங்களுள் ஒருவனை அந்த அசுரன் சுமந்திருந்தால், அவ்வுலகிற்கு அவன் போயிருக்க வேண்டும் அல்லவோ! என்று புகழ்ந்து கொண்டாடினர். தேவர் பூமாரி பொழிந்தார்கள்.

சிவமயம்

அமிர்தவசனி வாழ்த்து

நேரிசை வெண்பா

1 ஆத்திகம் ஓங்கி அமிர்த வசனியெனும்
கீர்த்தியாம் பத்திரிகை நீணிலத்துச்—சீர்திகழும்
நாமம் புனைந்துகுகன் நற்பெருமை பொற்புறவே
தாமேற் றிலங்குவது சால்பு

2 சால்பார் மனிதவுடல் சார்ந்த பயன்றேரில்
மால்கொண்டு மூவாசை மாட்டுழலா—தேல்வுடைய
ஈசன் கழல்போற்றி ஈடேற்றம் எய்துதற்கு
மாசற்ற பூசனையே மாண்பு

3 மாண்பார் கட்டுரையால் மக்கட்குத் தெய்வநெறி
பூண்டுறைதல் பொற்பென்னப் போதிக்கும்—ஆண்மை
அமிர்த வசனி அவனியிசை தேவா
வமிர்தமுண் டார் ஒத்திலகு மாம்

4 ஆமெனற் றெய்வீகம் அன்றென்பார் எல்லோரும்
பூமேல் வினைத்தளை பூண்டவரே—நாமெல்லாம்
நல்லமிர்த மாம்வசனி நாடோறும் கற்றுணர
வல்லா னருள்மல்கும் வந்து.

வா. ராமலிங்கம் பிள்ளை
தலைவர்,
திருஞானசம்பந்தர் திருவருட் கழகம், பேட்டை.

பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே
மெய்யதனை மெய்யெனவே மெய்யுடனே காண்பேனே

Redemption — The Royal Road

1 Live the joy celestial,
Sing of love universal,
Play the eternal child,
Gather the mirth of service.

2 Practise charity in judgment,
Pirate the poverty of the good
Pray only to remember God
And shed thy burdens self - imposed
at His ***Lotus Feet.***

3 Own nothing in thy consciousness,
For there lies theft and all what follows;
Not even thy body—for it is already owned:
The vile habitation of robbers hardened,
Yet when redeemed, the tabernacle of God.

4 Remember life is a wonder
And mind is a magic;
Both are fleeting but thou art to endure;
Learn then what thou art

5 Thou art the child of God
Built of Him and living in Him.
The world is His garden and
He lives in His work amidst His children.
Creation is His play of " Hide and Seek "

6 Wherever thou art, there He is.
Thine eyes are cast to see matter.
If thou but learnt to see Him
In matter living or dead, in motion or at rest,

The Lord, thy father will give thee
The eye to see Him in spirit as well.

7 He will discover Himself unto thee,
When thou hast first finished
The part of the play that is thine.
Be sure when thy seeking is over,
The hiding will go—will surely go.

8 The Lord will then stand before thee
In His essence true and incomparable.
At that sacred *then*, thou wilt realise
That thou art one with thy Lord, the Father.

9 The Hiding mantle of form and non-form
Then will drop never more to obstruct thy sight of God;
Thou wilt see Him in the fullest effulgence of joy celestial
Wherein thy berth ever stood registered
All the time of thy quondum hopes and fears and pleasures and miseries, of lives and deaths.

10 May the play—the divine play endure for ever,
The reminder of the great in the small things of life,
The shining light amidst the darkness of life,
The sprouting life amidst the apparent sea of death,
The Immortal joy of perfection amidst the apparent
Ill assorted valley of troubled earth.

(Thiruppugal Mani)

எனக்கெ னச்செயல் வேறிலை யாவுமிங் கொருநின்
தனக்கெ னத்தகும் உடல்பொரு ளாவியுந் தந்தேன்
மனத்த கத்துள அழுக்கெலாம் மாற்றியெம் பிரான் நீ
நினைத்த தெப்படி யப்படி அருளுதல் நீதம்

(தாயுமான சுவாமிகள்)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்
நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்

புரொப்ரைட்டர் :
சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு.
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel :—"FAITH' Estd :—1924 Phone :—113

வியாபாரக்குறி

N. K. M.
தங்கநாடா

நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
55, கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
81 Mount Road Madras—18